

உயிர்த் தோழர்கள் கதே-ஷில்லர் சிலை
(இது ஜெர்மனியில் உள்ள வீமர் நகரில் இருக்கிறது)

கதேயின்

# பாஸ்ட்

பி. ஜயாசாமி, எம். ஏ.

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு
அமுதம்—46
[illegible]டு-1952

விலை ரூ. 1—4—0

நாஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை-18

DEDICATED

TO

# Dr. THOMAS MANN

The Great German Scholar who is doing his best
to Interpret the Message of Goethe.

**"Goethe has always played an Important part in my own life and work."**

DR. THOMAS MANN
(From his Letter to the Author)

## சமர்ப்பணம்

கதேயின் செய்தியை உலகில் பரப்ப
அரும் பாடு பட்டுவரும்

### டாக்டர் தாமஸ் மேன்

அவர்களுக்கு

''கதே எப்போதும் என் வாழ்க்கையிலும்
வேலைகளிலும் பெரிதும் ஊக்கம்
கொடுத்து வந்திருக்கிறார்''

(இந் நூலாசிரியருக்கு டாக்டர் தாமஸ்மேன் எழுதிய கடிதத்திலிருந்து)

# பதிப்புரை

ஒரு மனிதனைக் கெடுப்பதாகத் தேவ லோகத்தில் சபதம் செய்து பூலோகத்திற்கு வந்த இருவர் விஸ்வாமித்திர மகா முனியும் மெபிஸ்டாபிலிசும். இந்தியத் தவ முனி ஏட்டிக்குப் போட்டி-வாத வேகத்தில் தூளுரைத்துத் தாம் சொன்ன சொல்லை நிலைநாட்டப் பார்த்தாரே ஒழிய, உண்மையில் அவர் தங்கமானவர். அரிச்சந்திரனுக்கு எதிராக அவர் மேற்கொண்ட முரட்டு முறைகள் சத்திய வீரனளவுக்குக் குறைந்த நெஞ்சத்திடத்திலும் வைரம் ஏற்றக் கூடியவைகள். முடிவில் முனிவர் தம் தோல்வியை ஒப்புக் கொண்டு, அரிச்சந்திரனை வாழ்த்தி விட்டுச் சந்தோஷமாகத் திரும்பிப் போகிறார்.

மெபிஸ்டாபிலிஸ் தீயவன். அவன் கையாண்ட நயவஞ்சக முறைகளில் பாஸ்ட் திக்கு முக்காடித் தப்பி வருவது நம் அநுதாபத்தைப் பெறுகிறது. சிந்து விளையாடல்களினால் தன்மை இழந்து, முடிவில் ஆத்ம நாசம் அடைவது தான் பழைய பாஸ்ட் கதைகளின் போக்கு. ஜெர்மானிய மாபெரும் புலவர் கதே இதை மாற்றி அமைத்துப் பல அரிய தத்துவ போதனைகளுக்கு நிலைக்களனாக்கி விட்டார் பாஸ்ட் கதையை.

தெளிவான பயனில்லாததும் தீராததுமான அறிவுப் பசியே பாஸ்ட்டின் பிரச்னை. அவர் இந்திய மண்ணில், திருவள்ளுவருடைய தமிழ் நாட்டில், பிறந்திருந்தால், அறிவின் பயன் கடவுள் வணக்கமே என்று நிம்மதியடைந்திருப்பார்.

பாஸ்ட்டை வெல்வதற்கு மெபிஸ்டாபிலிஸ் அவரை மதுக் கடைக்கு அழைத்துச் சென்றது பச்சைக் குழந்தைத் தனமே யாகும். அறிவைப் பெருக்குவதிலேயே தேட்ட முடையவர் அதை ஒரே யடியாகத் தொலைக்கக் கூடிய மதுபானத்தை நிராகரித்ததில் ஆச்சரியம் இல்லை.

பிரம்மசாரியாகிய பாஸ்ட்டைக் காம இன்பத்தில் நினைக்கச் செய்து, "நீ தான் என் மனத்துக்கு இசைந்த ஆப்தன்," என்று அவருடைய பாராட்டையும் பெற்ற போது, மெபிஸ்டாபிலிஸ் தன் வெற்றியின் எல்லை வரையில் வந்து விட்டான். இப்போது பாஸ்ட்டின் இயற்கையான நற்குணம், 'ஓர் அறியாத பெண்ணைக் கெடுத்து விட்டோமே!' என்று வருந்தி, இதற்காக மெபிஸ்டாபிலிசை நொந்து கொள்வது ஒன்றுதான் அவர் விஷயத்தில் நம்பிக்கைக்கு இடம் கொடுக்கிறது.

மனிதன் இயற்கையில் பாபாத்மா என்றும், செய்த பாபத்துக்கு மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதன் மூலம் ரட்சிப்புக் கிடைக்கும் என்றும் கிறிஸ்தவ மதம் போதிக்கிறது. இதை மார்கரெட்

விஷயத்தில் நன்றாகப் பார்க்கிறோம். அவள் பெரிய பக்தை; கடவுள் விஷயத்தில் பாஸ்டின் கருத்தை அறிவதில் அவளுக்குச் சிரத்தை இருக்கிறது. மெபிஸ்டாபிலிஸைக் கண்ட மாத்திரத்தில் அவள் வெறுப்படைகிறாள். இந்த வெறுப்பே சிறையிலிருந்து பாஸ்ட்டுடன் வெளியேறுவதை விடுத்து, தன் தண்டனையை எதிர் நோக்கும் தைரியத்தை அவளுக்குக் கொடுத்து விடுகிறது.

ஹெலனை வரவழைக்கும் விஷயமாகப் பாஸ்ட் மெபிஸ்ட்டாபிலிஸுக்கு ஒப்பந்தத்தை நினைவுறுத்தி, ‘நீ இதைச் செய்தே தீர வேண்டும்!’ என்று கண்டிப்புச் செய்கிறார். அவர் தம் ஆத்ம பலத்தை இழக்காதது மட்டுமன்றி, அதை வற்புறுத்தி நிலை நாட்டுவதையும் காணும் போது, மெபிஸ்டாபிலிஸ் தோல்வி முகத்தில் நிற்பதை உணர்கிறோம்.

தம் முதிர்ந்த அநுபவ ஆராய்ச்சிகளின் திறமை எல்லாவற்றையும் கதே ஹெலன் சம்பவத்தில் கொட்டிவிடுகிறார். பிரம்மசாரியாக வாழ்ந்த பாஸ்ட் ஹெலனுடன் இல்லறம் நடத்திய பின், கடற்கரையில் ராஜரிஷி கோலத்தில் வானப்பிரஸ்தாஸ்ரமம் நடத்துவதைக் காண்கிறோம். மக்களன்பிலும் சேவையிலும் பக்குவமடைந்த பாஸ்ட் ஜபாலய தம்பதிகளை அழித்து வந்ததற்காக மெபிஸ்டாபிலிஸைத் தூற்றுகிறார். அவர் ஆணையை மீறியதன் மூலம் மெபிஸ்டாபிலிஸ் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டபடியால், இறந்த பிறகு பாஸ்ட் - ஆத்மா மீது அவனுக்கு உரிமை யற்றுப் போகிறது. அவன் படுதோல்வி யடைகிறான். இறுதியில் நிகரில்லாத சோதனைகளிலிருந்து மீண்டு வந்த வீரனைத் தேவலோகத்தில் மார்கரெட் இன்பமுடன் வரவேற்கிறாள்.

பாஸ்ட் கதையிலும், கதேயின் கொள்கைகளிலும் நெடு நாள் ஊறிப்போன நெஞ்சத்துடன் ஸ்ரீ ஐயாசாமி பாங்காகக் கதையை எழுதி இருக்கிறார். இதை ஒரு பெருமிதத்துடன் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

# பொருளடக்கம்


முன்னுரை:—

| | | | |
|---|---|---|---|
| I. | கதைத் தோற்றம் | ... | 1 - 4 |
| II. | இந்நூல் | ... | 4 - 6 |
| III. | கதேயின் வாழ்க்கை வரலாறு | ... | 6 -13 |

பாஸ்ட்

| | | | |
|---|---|---|---|
| I. | சாத்தானின் சபதம் | ... | 14–16 |
| II. | சாத்தானுடன் ஒப்பந்தம் | ... | 16–22 |
| III. | மதுபானம் | ... | 22–23 |
| IV. | மாந்திரீகம் | ... | 23–24 |
| V. | மார்கரெட் | ... | 24–35 |
| VI. | இடை நிகழ்ச்சிகள் | ... | 35–37 |
| VII. | அரண்மனை வாழ்வு | ... | 37–39 |
| VIII. | ஆவியுலகம் | ... | 39–42 |
| IX. | ஹெலன் | ... | 42–47 |
| X. | போர் | ... | 48–49 |
| XI. | சேவை | ... | 50–51 |
| XII. | கவலை | ... | 51–53 |
| XIII. | மனந்திரும்புதல் | ... | 53–55 |
| XIV. | மன அமைதி | ... | 55–58 |
| | முடிவுரை | ... | 59–61 |

## சித்திரங்கள்

உயிர்த் தோழர்கள் கதே-ஷில்லர் சிலை
(இது ஜெர்மனியில் வீமர் நகரில் உள்ள நாடகசாலைக்கு முன் நிற்பது)

— முகப்புப் பக்கம்

மெலிஸ்டாபிலிசின் தோல்விப் பிரமை

— 57ம் பக்கத்துக்கு எதிரில்

# முன்னுரை

## I

## கதைத் தோற்றம்

**'பாஸ்ட்' கதை**

உலகத்திலேயே பிரசித்தி பெற்று விளங்கும் கதைகளுள் பாஸ்ட்டின் கதையு மொன்ருகும். மனிதனுக்கு மாய மந்திரத்தி லுள்ள நம்பிக்கையே இக் கதைக்கு ஆதார மாகும். சரித்திர காலம் தொடங்கியது முதல் இவ்வுலக முழுவதிலுமே மனிதர் களிடையே சிற்சில சிறிய மாறுபாடுகளுடன் இந் நம்பிக்கை இருந்து வந்துள்ளது. ஆராயுங்கால், மனிதன் கடவுளைப் பற்றி அறிய யத்தனிக்கும்பொழுது ஏற்பட்டதே இந் நம்பிக்கை. இந் நம்பிக்கையானது மதக் கொள்கைகளின் மூலாதாரமாக இல்லாத போதிலும், மத ஆராய்ச்சியினின்றே எழுந்தது. ஆதியில் இம் மாய மந்திரங்களைக் கையாண்டு வந்தவர்கள் மத குருக்களே; அதன் பின் வைத்தியர்கள். ஏக தெய்வ வணக்கம் ஏற்பட்டு, மனிதன் தெய்வத்தை அன்பின் திருவுருவ மெனக் கண்ட பின்னர், இம்மாய மந்திர வித்தையானது கடவுளுக்கு விரோதமான தென்றும், பிசாசின் கிரியை யென்றும் கருதப்பட்டது.

மனித னெருவன் தனது பேராசையினல் தூண்டப்பட்டு, அவனது இயற்கை ஆற்றலுக்கும் மேம்பட்ட சக்தியை யடைந்து, தனது வலிமையைக் காட்டும்படியாகக் கடவுள் நம்பிக்கையைத் துறந்து, சாத்தானுடன் ஒப்பந்தம் செய்து, அவனுக்குத் தன் ஆன்மாவை விற்றுவிட்ட இக் கிரியைகளினல் இயற்கைக்கு மாருகச் சென்றதே இக் கதையின் சாராம்ச மாகும். இக்கதை யானது பல தேசங்களில் பற்பல விதமாகச் சிதைவுற்றுக் கடை சியில் பதினைந்தாம் நூற்ருண்டில் மிக்க புகழ் பெற்று விளங் கியது. 1577–ஆம் ஆண்டிற்குப் பின்னர் இக்கதையானது ஒரு புதிய அம்சம் பெற்று விளங்கலாயிற்று. பற்பல திரிபு, சிதைவு முற்ற வரலாறுகள் ஒருங்கே சேகரிக்கப் பெற்று, "மாய மந்திர

விதைகளில் இணையிலா டாக்டர் ஜான் பாஸ்டஸின் (Johann Faustus) சரிதை"* என்ற பெயருடன் ப்ராங்பர்ட் (Frankfurt) ஐச் சேர்ந்த ஜான் ஸ்பீஸ் (Johann Spiess) என்பவரால் ஜெர்மானிய மொழியில் ஒரு நூலாக வெளியிடப்பட்டது. சாத்தானுடன் ஒப்பந்தம் செய்ததும், அதன் பயனாக மனிதனு லறியப்படாத உலகங்களுக்குச் சென்ற அற்புத ஆற்றல்களும், மாய வித்தையின் மாபெரும் அதிசயச் செயல்களும், காம இன்பங்களும், கடைசியில் ஏற்பட்ட துக்கமான முடிவும், மிகத் தெளிவாகவும், நுட்பமாகவும் வரையப்பட்டுள்ளதால், இந்நூலே பின் எழுதப்பட்ட பாஸ்ட்டின் கதைகளுக்கு அடிப்படையாக விளங்கியது.

### மார்லோவின் 'பாஸ்ட்'

இக்கதையை ஓர் சிறந்த நாடகமாக எழுதலாமென முதன் முதலில் ஊகித்தறிந்தவர் கிறிஸ்டோபர் மார்லோ (Christopher Marlow 1564–93) என்ற ஆங்கிலப் புலவராவர். ஜெர்மானிய மொழியில் வெளிவந்த பாஸ்ட்டின் கதையை அவர் உடனே வாங்கிப் படித்து, அக்கதையை ஆங்கிலத்தில் 1589–ம் ஆண்டில் நாடக வடிவில் வெளியிட்டார். தேவையான ஒரு சில வேறுபாடு களன்றி, மற்றப்படி அவரது நாடகம் முற்றிலும் அந்த ஜெர்மானியக் கதையைத் தழுவியே அமைந்திருந்தது. எலிசபெத் அரசியாரின் காலத்தில் நாடகக் கலைக் கேற்பட்ட சிறப்பானது, பிரசித்தி பெற்ற சில ஆங்கில நடிகர்களுக்கு ஜெர்மானிய அரசவையில் வேலை கிடைக்கச் செய்தது. இவர்களின் மூலமாக மார்லோவின் பாஸ்ட் நாடகம் ஜெர்மானிய தேசத்தில் அடிக்கடி நடிக்கப்பட்டது. இந்நாடகமானது பரம்பரையாக நடிகர்களால் பல மாறுதல்களுடன் நடிக்கப்பட்டு, இறுதியில் அது ஒரு கோமாளிக் கூத்தாகவும், வேடிக்கைக் காட்சியாகவும் திரிபுற்றது. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தின் தேசீய நாடகக் கலையில் ஏற்பட்ட புது மலர்ச்சி சிறிது சிறிதாக மேற்கு தேசங்களுக்குப் பரவியது. ஆகவே, இத்திரிபு மக்களின்

* "The History of Johann Faustus, the far-named Sorcerer and Master of the Black Art"

பண்புக்கு ஒவ்வாத தாயிற்று. எனவே இந்நாடகமும் இவ்வித நோக்கத்துடன் நடைபெறுவது குறைந்தது.

## பொம்மலாட்டம்

ஆனால் பாஸ்டின் கதை அந்நாட்டு மக்களின் மனதைக் கொள்ளை கொண்டதால், பின்னர் அது பொம்மலாட்டமாகக் காட்டப்பட்டது. இப் பொம்மலாட்டத்திற் குரிய நாடக வசனம் எழுத்து வடிவில் இல்லை. இவ்வசனமானது அநேகமாகத் தகப்பனால் மகனுக்கும், மகன்—மகனுக்குமாகத் தலைமுறை தலைமுறையாக வாய்ப் பாடமாக வழங்கப்பட்டு வந்தது. பல ஆண்டுகளுக்குப் பின் வில்ஹெம் ஹாமென் (Wilhem Haman) என்பவர் இவ்வசனங்களைச் சேகரித்து, அவற்றை மேடையில் நடிப்பதற்கான முறையில் எழுதி, ஓர் நூலாக வெளியிட்டார். இப் பொம்மலாட்டக் குழுவினர் கதேயின் பிறந்த ஊராகிய மேய்ன் நதி மேலுள்ள ப்ராங்பர்ட்டிற்கு வந்து ஒரு சந்தை நாளில் பாஸ்ட் கதையை நிகழ்த்திக் காட்டியபொழுது, சிறுவரா யிருந்த கதே இதைப் பார்த்தனர். உடனே இக்கதைபால் அவரது மனம் வசீகரிக்கப்பட்டது. வசீகரிக்கப் பட்டது மன்றி இக்கதையானது அவர் மனத்தில் பசுமரத்தாணி எனப் பதிந்தது; பின்னர் இதுவே அவர் தமது நிகரற்ற பாஸ்ட் நாடகம் எழுதுவதற்கு அடிப்படையாக விளங்கியது.

## கதேயின் பாஸ்ட்

கதேக்கு அவரது இருபதாவது வயதில், அதாவது 1769—ஆம் ஆண்டில், பாஸ்டின் கதையை நாடகமாக எழுத வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. நோய்வாய்ப்பட்டு, அது நீங்கின பின்னர் ஓய்வு பெற அவர் லீப்ஸிக்கிலிருந்து (Leipzig) ப்ராங்பர்ட்டிற்கு வந்திருந்தபொழுது, இரச வாதம், மாந்திரீகம் முதலிய கலைகளை ஊக்கமாகக் கற்றார். நான்கு வருடங்களுக்குப் பின் அவர் பாஸ்ட் நாடகத்தை எழுதத் தொடங்கி (Faust, a Fragment) "பாஸ்ட் நாடகத்தின் ஒரு பகுதி" என்ற தலைப்புடன் வெளியிட்டார். 1775—ஆம் வருடத்தில் அவர் வீமர் நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதனை லேற்பட்ட ஓய்வில்லா அரசாங்க அலுவல்களினால், அவர் அதை மேலும் தொடர்ந்து எழுத முடிய

விட்டு ஆனால் 1797–ஆம் ஆண்டில் அவரது உயிர் நண்பரான ஷில்லரின் (Schiller) இடைவிடாத் தூண்டுதலின் பேரில் அவர் அதைத் தொடர்ந்தெழுதி, நாற்பது வருடங்களுக்குப் பின் 1808–ஆம் ஆண்டில் தமது பாஸ்ட் நாடகத்தின் முதல் பாகத்தை வெளியிட்டார். இவ்வரிய சேவைக்கு என்றும் ஷில்லருக்கு நாம் கடமைப் பட்டுள்ளோம்.

இந் நாடகத்தின் முதல் பாகம் வெளிவரும் முன்னரே, கதே அதன் இரண்டாம் பாகத்தையும் எழுதத் திட்டமிட்டிருந்தார். அப்பொழுதே அவர் 'ஹெலனை'ப் பற்றிய நிகழ்ச்சியை எழுதியிருந்தார். இதையே அவர் அடிப்படையாகக் கொண்டு தமது இரண்டாம் பாகத்தை எழுதி முடித்தார். 1831–ஆம் ஆண்டுக் கடைசியிலேயே இது முடிவு பெற்றது. 1832–ஆம் ஆண்டுத் துவக்கத்தில் அவர் இதில் சில சிறிய மாறுதல்களை அமைத்தார். அதே வருடம் அவரது மரணத்திற்குப் பின் வெளியான அவரது நூல்களில் இதுவும் ஒன்ருயிற்று. கதேயின் 'பாஸ்ட்'டினுல் இக் கதை ஜெர்மானிய இலக்கியத்தில் ஓர் உயர்ந்த இடம் பெற்றது.

**டாக்டர் தாமஸ் மேன் (Dr. Thamas Mann.)**

**டாக்டர் 'பாஸ்ட்டஸ்'**

டாக்டர் தாமஸ் மேன் எழுதிய 'டாக்டர் பாஸ்ட்டஸ்' என்ற கதையானது ஏட்ரியன் (Adrian) என்ற ஒரு ஜெர்மானிய சங்கீத வித்வானின் வாழ்க்கையைப் பற்றிய தாகும். 1949–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்நூலில் பாஸ்டு கதையின் மூலக் கருத்து வியக்கத் தக்க விதமாய் நவீன முறையில் கையாளப் பட்டுள்ளது.

## II
## இந்நூல்

கதேயின் 'பாஸ்ட்'டைப் படித்து ஆராயுங்கால், இக் காவியத்தில் அளவிட முடியாத சித்துக்களும், ஞானமும், செய்யுள் நலமும், சிறந்த கருத்துக்களும், மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய ஒப்புயர் வற்ற கொள்கைகளும் செறிந்து கிடக்கின்றன என்பதே இதனை வாசிக்கும் அறிஞர்கள், விரிவுரையாளர்கள் முதலியோரின் கருத்தாகும். இது எழுதப்பட்டு 140 வருடங்

களான போதிலும், உலகத்திலுள்ள என்று மழியாத இலக்கிய நூல்களில் இதுவும் ஓர் உயர்ந்த இடம் பெற்றுள்ளது. இந்நாடகமானது ஐரோப்பிய மொழிகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகளுடன் விளங்குகிறது. இப்பேர்ப்பட்ட ஓர் அரிய நூல் இன்னும் நம் நாட்டு மொழிகள் ஒன்றிலேனும் மொழி பெயர்க்கப்படாதிருப்பது மிகவும் வருந்தத் தக்கதே. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் இந்நூலை வாசித்து அதன் ஆராய்ச்சியில் ஈடுபட்ட நாள் முதல் இன்றுவரை, எனக்குக் கிடைக்கக் கூடிய எல்லா ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் வாசித்து வருகின்றேன். ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்ற ஒருவர் இவ்வரிய நூலைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டு மென்பதே என் அவா. இது இன்னும் என் மனத்தைவிட்டு நீங்கவில்லை. திருக்குறள், திருவாசகம், சிலப்பதிகாரம், தாயுமானவர் பாடல் ஆகியவை ஆங்கிலத்திலும் மற்றும் சில பிற ஐரோப்பிய மொழிகளிலும் பெயர்க்கப் பெற்ற காலத்து, தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் அளவுண்டோ! கதேயின் 'பாஸ்ட்' நாடகமும் அவ்வாறே தமிழில் மொழி பெயர்க்கப்படும் அந்நந்நாளில் தமிழ் மக்களுக்கு உண்டாகும் பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் ஓர் எல்லையு முண்டோ! விரிவான சொல்லகராதியும், எதுகை, மோனை நிரம்பிய யாப்பிலக்கணமும், பல்வேறான அணி யிலக்கணமும், எல்லாவற்றிற்கும் மேலாக, நுண் கருத்துக்களையும், ஆத்மீக அருங் கொள்கைகளையும் அழகாக எடுத்துரைக்கக் கூடிய சொல் வன்மையும் பொருந்திய தமிழ் மொழியே கதேயின் நூல்களை மொழிபெயர்ப்பதற் கேற்ற தென்பது என் துணிவு.

கதேயின் முக்கிய கருத்துக்களை விட்டுவிடாமல், அவரது நாடகத்தைக் கதையாகத் தமிழில் எழுதவே யான் இந்நூலில் முயன்றுள்ளேன். இரசமான கட்டங்களில் சிறந்த கருத்துக்களை என்னு லியன்ற வரையில் தமிழ்ச் செய்யுட்கள் மூலம் விளக்கி யுள்ளேன். இதில் யான் தவறி யிருக்கக்கூடும். அங்ஙனம் யான் தவறி யிருப்பேனே யாகில், அதைச் சரியான முறையில் விளக்கிக் காட்டத் தகுதி வாய்ந்த அறிஞர் யாராகிலும் முன் வருவாராயின் அவருக்கு நான் நன்றி யறிதலுள்ளவனு யிருப்பேன்.

இன்று திரைப்படம் மிகச் சக்தி வாய்ந்த பிரசார சாதன மாகத் திகழ்கின்றது. ஆகவே இக்கதையைச் சிற்சில மாறுதல் களுடன் மேடையிலும், திரைப் படத்திலும் நடிப்பதற் கேற்ற வாறு விரிவான வசனத்துடனும், உடை ஜோடனை முதலிய குறிப்பு களுடனும் எழுதியுள்ளேன். உலகப் பிரசித்தி பெற்றதும், உயரிய கருத்துக்களை எடுத்துக் காட்டுவதும், நாடகத்துக் குரிய எல்லா அம்சங்களும் பொருந்தியது மான இக்கதை திரைப் படத்தில் நன்கு எடுக்கப்பட்டால், தென்னாட்டுத் திரைப்பட சரித் திரத்திலேயே என்றும் போற்றத்தக்க கலைச் சித்திரமாக விளங்கு மென்பது எனது துணிபு. எனது வாழ்க்கையி லேற்பட்ட சில இடுக்கணான சமயங்களிலும், மற்றும் பல சமயங்களிலும், எனக்கு ஆறுதலும் ஊக்கமு மளித்த 'பாஸ்ட்' நாடகத்தை யெழுதிய பெரியாருக்கு நான் பட்டிருக்கும் கடனைத் தீர்க்க என்னால் செய்யத் தகுவது இவ்வற்ப சேவையே யாகும்.

இந்நூலைத் தமக்குச் சமர்ப்பித்து வெளியிட எனக்கு அநுமதி அளித்த டாக்டர் தாமஸ் மேன் (Dr. Thomas Mann) என்ற பெரியாருக்கு என் நன்றி உரித்தாகுக.

அத்துடன் இந்நூலை இயற்றி வெளியிட எனது பிரதிகளை எழுதியும், படித்தும், தமது அரிய கருத்துக்களை வெளியிட்டும், இதைச் சிறப்புறச் செய்து எனக்கு ஊக்கமும், உதவியு மளித்த எனது மனைவியாரின் சேவையை யான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றும் இந்நூலை அச்சிட்டுப் பதிப்பிக்க அன்புடன் ஒப்புக் கொண்டு, இதைத் தமது வழக்கம் போலவே மிகவும் அழகாக வெளியிட்ட அமுத நிலையத் தலைவர் திரு ஸ்ரீகண்டன் அவர் களுக்கு எனது வணக்கம்.

## III

## கதேயின் வாழ்க்கை வரலாறு

ஜான் உல்ப்காங் கதே (Johann Wolfgang Goethe) வட, தென் ஜெர்மானிய நாடுகளின் எல்லைப்புறத்திலுள்ள மேய்ன்

(Main) நதிக்கரையிலுள்ள ப்ராங்பர்ட் (Frankfurt) என்ற ஊரில் 1749–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை ஜான் கேஸ்பர் கதே. (Johann Kasper Goethe). தாய் கத்தரீனுள் எலிசபெத் (Catherine Elizabeth). இவரது தந்தை ஒரு வழக்கறிஞர். சிறிது காலம் அவர் அத்தொழிலை நடத்திய பின்னர், யாதொரு திட்டமான வேலையு மின்றி ப்ராங்பர்ட்டில் குடியேறினர். அவரது குடும்ப வாழ்க்கை அவரது மனைவியாரது ஆஸ்தியின் வருவாயிலிருந்தே நடைபெற்று வந்தது. என்ற போதிலும் அவர் ஒரு ராஜரீக ஆலோசனையாள ராக நியமனம் பெற்றதால், அவருக்கு அவ்வூரில் மிகுந்த கௌரவம் இருந்து வந்தது. நியாய நூலில், அவருக்கிருந்த அபூர்வ ஞானத்துடன் இலக்கண இலக்கிய நூல்களிலும், ஓவியக் கலையிலும் அவருக்கு உள்ளூர விருப்பம் உண்டு. கதேயின் தாயார் நுண்ணறிவும், மிக்க எழிலும் படைத்தவர். சங்கீதத்திலும், செய்யுளிலும் மிகுந்த விருப்ப முடையவர். கதைகள் கட்டி, அவற்றை விளக்கிச் சொல்வதில் மிகத் திறம் படைத்தவர். இவ்வாறு புனைந்து கூறும் திறனை கதே தம் தாயாரிடமிருந்தே பெற்றூர்.

கதேயினது இளமைப் பருவம் யாதொரு இன்னலு மின்றி இனிது கழிந்தது. அவர் பள்ளியில் சேர்ந்தபொழுது அவரது கலையறிவும், ஆங்கிலம், லத்தீன் இவ்விரு மொழிகளிலும் அவர் காட்டிய ஆர்வமும் எல்லோரையும் வியப்படையும்படி செய்தன. பிரெஞ்சு மொழியில் அவர் மிகுந்த வாக்குச் சாதுரியம் பெற்றூர். அன்றியும் பிரெஞ்சு நாடகங்கள் அவர் மனதைக் கவர்ந்தன. அதன் பின்னர் அவர் தம் தந்தையின் தொழிலில் ஈடுபட லீப்சிக் (Leipzig) பல்கலைக் கழகத்தில், சட்டப் பயிற்சி மாணவராகச் சேர்ந்தார். அச் சமயத்தில் தான் அவர் தம் மனத்தெழும் உணர்ச்சிகளை வெளியிடும் கீர்த்தனைகளை இயற்றினர். தமது கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு ப்ராங்பர்ட் திரும்பிய கதே சிறிது காலம் வழக்கறிஞர் தொழிலை வேண்டா வெறுப்புடன் மேற்கொண்டார். ஆனல் அவரது உண்மை ஆர்வம் செய்யு ளிலக்கிய நூல்களிலேயே இருந்தது. அவர் தமது முதல் நாடகமாகிய 'கோர்ட்ஸ்'ஐ (Götz) 1773–ஆம் ஆண்டில் எழுதினர். அடுத்த

ஆண்டிலே அவர் இயற்றிய "யௌவன வர்தரின் வருத்தங்கள்" (Sorrows of young Werther) என்னும் காதற் கதை வெளியாயிற்று. 1773, 1775ஆம் ஆண்டுகளுக் கிடையில் அவர் 'பாஸ்ட்' நாடகத்தை எழுதத் தொடங்கினூர். இவை யெல்லாம் அவரது இருபத்தாரும் வயதிலேயே அவருக்குப் புகழைத் தேடித் தந்தன.

கதேயை ஏற்கனவே சந்தித்து, அவர் மீது உணர்ச்சி வசந்தாலேற்பட்டிருந்த அன்பினுல், 1775–ஆம் ஆண்டு நவம்பர் மாதம், தமது இருப்பிடமான வீமருக்கு (Weimar) வரும்படி, வீமர் கோமகனுகிய (Duke of Weimar) கார்ல் ஆகஸ்ட் (Karl August) அவரை அழைத்தனர். அவரும் அவ்வழைப்பிற் கிணங்கி அங்கு சென்ருர். 1776–ஆம் ஆண்டில் அவரைத் தமது மந்திராலோசனை சபையின் உறுப்பினராக வீமர் நாட்டுக் கோமான் நியமித்தார். அதன் பின் வீமரே கதேயின் உறைவிட மாயிற்று. அவருக்கு அதுவன்றி வேறு தனிப்பட்ட அலுவல்களும் கொடுக்கப்பட்டன. முக்கியமாகப் பொதுமக்கள் தொழில் திட்டத்தின் தனிப் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் அவர் பௌதிக சாஸ்திரம், சுரங்கம் அமைத்தல் முதலியவற்றிலுள்ள அறிவைப் பெருக்கிக் கொண்டார். பொதுவாகக் கல்வி சம்பந்தமாக அவர் பல நன்மைகள் புரிந்தார். சிறப்பாக ஜீனு (Jena) பல்கலைக் கழகத்திற்கு அடிக்கடி பல உதவிகள் செய்து வந்தார். தமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை ஒழுங்காகவும், செம்மையாகவும் செய்து முடிக்கும் பண்பு வாய்ந்தவ ராதலாலும், வீமர் நாட்டுக் கோமானுடனும், அவரது குடும்பத்தினருடனும் நெருங்கிப் பழக நேரிட்டதாலும், அந்நாட்டு அரசாட்சிக்கு அவரே ஊன்றுகோலாக விளங்கினூர். அவ்வரசாங்க காரியங்களி லெல்லாம் தமது ஊக்கத்தைச் செலுத்தி அவற்றைச் செவ்வனே செய்து முடித்தார். எப்பணியையும் உண்மையுடன் செய்து முடிக்கும் குணம் படைத்தவ ராதலால், பிறரது உண்மை யற்ற ஊழியத்திற்குச் சிறிதும் சம்மதியார். அவர்களிடம் மிகவும் கண்டிப்புடையவர்.

தமது அரசியல் வாழ்வின் துவக்கத்திலேயே கதே தமது உடலையும், மனதையும் கட்டுப்படுத்தி நடத்தப் பழகினூர். வெறும்

பாயலின் மேலேயே தூங்குவார். குறைந்த அளவு திராட்சை ரசமே அருந்துவார். கோடையிலும், மாரியிலும் ஒழுங்காகக் குளிர்ந்த நீரிலேயே குளிக்கப் பழகினர். அவருக்குக் குதிரை யேற்றத்திலும் உலாவச் செல்வதிலும், சிலம்பு வித்தையிலும், மற்ற உடற்பயிற்சிகளிலும் விருப்ப மதிகம். தமது உடல் நிலையை விழிப்பாகக் காப்பாற்றி, சீரிய நிலையில் வைத்துக் கொள்வதற்காக அவ்வப்போது மலையி லுள்ள உறைவிடங்களுக்குச் சென்று வருவார்.

1782–ஆம் ஆண்டில் அவருக்குப் 'பிரபு' (noble) பட்டம் அளிக்கப்பட்டது. அதோடுகூட அவர் பொருளாதாரக் குழுவிற்குத் தலைவராகவும் நியமிக்கப் பட்டார்.

நெருக்கமான அரசாங்க அலுவல்கள் மத்தியிலும், விஞ்ஞானம், தாவர நூல், உயிர் நூல் போன்ற சாஸ்திரக் கல்வியின் மத்தியிலும் அவர் இலக்கியத்தைக் கைவிடவில்லை. அவரது கற்பனு சக்தியையும், சிருஷ்டிக்கும் தன்மையையும் நுட்பமாய் விளங்க வைக்கச் செய்யுட்களைக் காட்டிலும் சிறந்த வழி வேறொன்று மில்லை.

கதே சிறிது காலம் இத்தாலிய (Italy) தேசத்தில் தங்கி 1788–ஆம் ஆண்டில் வீமருக்குத் திரும்பினர். அதன் பின் அவர் கிறிஸ்றியானு வல்பயஸ் (Christiana Vulpius) என்ற நங்கையைச் சந்தித்தார். அவளது எழில் ததும்பும் வதனத்தையும், சூதுவாதற்ற தன்மையையும் கண்ணுற்ற கதே அவள் மீது காதல் கொண்டார். அவள் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணேயாயினும், அவளைத் தமது வாழ்க்கைத் துணைவியாகத் தெரிந்து கொண்டார். அவ்வாறே அவர்களிருவரும் கூடி இல்லறத்தை இனிதே நடத்தினர். ஆனல் அவர்கள் கோவிலில் பலரறியக் கணவன் மனைவியெனக் கைப்பிடித்தது 1806–ம் ஆண்டு அக்டோபர் மாதம்தான். புற அழகே போன்ற அக அழகும் அமைந்த அந் நங்கை அவருக்கு ஓர் உயரிய வாழ்க்கைத் துணைவியாகி, கடைசி வரை தனது 'பெருமை வாய்ந்த கணவனின்' அன்பில் சிறிதும் குறையப் பெற்றிலள்.

1788–ல் தான் ஷில்லரும் (Schiller) அவரை வீமர் நகரத்தில் சந்தித்தார். அன்று அவர்களிடையே எழுந்த அன்பு, அவர்களது வாழ்நாள் முழுவதும் சிறிதும் குறையாமல் "நிறை நீர நீரவர் கேண்மை" என வளர்ந் தோங்கியது. 1805–ஆம் ஆண்டு நேரிட்ட ஷில்லரின் மரணம் கதேக்கு மிக்க துயரத்தைக் கொடுத்தது. அவரே, "இப்பேர்ப்பட்ட துயரை யான் இதுவரை அறிந்திலேனே!" என உருக்கமுடன் கூறியுள்ளார்.

1791–ஆம் ஆண்டில் வீமர் நகரத்தில் அந்நாட்டுக் கோமகனின் ஆதரவின் கீழ் ஒரு நாடகசாலை நிறுவப்பட்டது. அதன்மீது பூரண ஆதிக்கம் பெற்ற கதே, அது கற்றோரின் கருத்துக் கேற்ப, ஓர் ஒப்புயர்வற்ற நாடகசாலையாக விளங்க வேண்டு மென்னும் நோக்கத்துடன் வெகு சிரத்தை எடுத்துக்கொண்டார். அதன் விளைவாக அந் நாடகசாலையும் மிக்க புகழ் பெற்றோங்கியது.

ஷில்லர் மரணத்தின் மறு ஆண்டில் ஜெர்மானிய தேசமெங்கும் அமைதி குறைந்தது. 1806–ம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினலாம் நாள் ஜீனவில் (Battle of Jena) நெப்போலியன் அடைந்த வெற்றி பிரஷியா தேசத்து (Prussia) வலிமையை அழித்து, அதன் நேச நாடான வீமர் நாட்டையும், அந்நாட்டுக் கோமகனையும் நெப்போலியன் தயவின் கீழ் சிக்க வைத்தது. கதேயின் இலக்கியப் பெருமையை யறிந்திருந்த பேரரசனாகிய நெப்போலியன், அவரை மரியாதையாக நடத்துமாறு தமது போர் வீரருக்குச் சொல்லி யனுப்பினார். இதற்கு இரண்டு வருடங்களுக்குப் பின்னரே, சரித்திரப் புகழ்பெற்ற இருவரின் சந்திப்பும் 1808ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் நடைபெற்றது. ஈமைல் லட்விக் (Emil Ludwig) இவ்விருவரது சந்திப்பையும், "இரு இராட்சதரின் சந்திப்பு" எனத் திறமாய்ச் சித்தரித்துள்ளது வாசித்து அனுபவிக்கத் தக்கதே. நெப்போலியன் 'வர்தரை'ப் பற்றியும், (Werther) வால்டேரைப் (Voltaire) பற்றியும், பொதுவாகப் பிரெஞ்சு நாடகங்களைப் பற்றியும் பேசலானார். வீமர் நாடகசாலையில் நடந்த வால்டேரின் நாடக மொன்றைப் போய்ப் பார்த்தார். அதற்குப் பின் நிகழ்ந்த அரசாங்க நடனக் கூட்ட மொன்றில், அநேக முடிசூடிய

மன்னர்களும் கூடியிருக்க, நெப்போலியன் அவர்களை விட்டுத் தமது நேரத்தில் பெரும்பாகத்தை கதேயுடன் அளவளாவுவதிலேயே செலவிட்டார். இதிலிருந்து நெப்போலியனுக்கு கதேயிடமுள்ள நன்மதிப்பு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றதன்றோ! பின்னர் அவர் கதேக்குப் பாரிஸ் நகருக்கு வருமாறு அழைப்புக் கொடுத்து, அன்னாரின் தகுதிக் கேற்ற வரவேற்புக் கொடுக்கப்படும் எனவும் வாக்களித்தார்.

1808–ம் ஆண்டின் கடைசியில் கதே தாம் எழுதிய 'பாஸ்ட்' நாடகத்தின் முதல் பாகத்தை வெளியிட்டார்.

1816–ம் ஆண்டில் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் வீமர் கோமகன் முழு அரசுரிமை (Grand Duke) பெற்றார். மக்களின் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட அரசாங்கம் வீமரில் நிறுவப்பட்டது. கதே அந்நாட்டு முதன் மந்திரியாக நியமிக்கப் பட்டார்.

1816–ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவர் மனைவியார் மரண மடைந்தார். அதற் கடுத்த வருடம் அவர் தம் மகன் ஆகஸ்ட்டுக் குத் திருமணம் செய்வித்து மகிழ்ந்தார். அதன் பின் பிறந்த அரிய இரு பேரன்மாரும் அவரது இறுதிக் காலத்தில் அவருக்கு இன்ப மளித்து வந்தனர்.

முழு அரசுரிமை பெற்ற வீமர் கோமகனின் பதினைந்தாம் முடிசூட்டு ஆண்டுவிழா வன்று, அன்னார் கதேயின் வாழ்த்து மொழிகளுக்கு வந்தன மளித்துப் பேசுகையில், அவரைப் புகழ்ந்து "நாம் உள்ளளவும் ஒன்றாகவே யிருப்போம்" எனக் கூறினார். இவ்வாறு ஒரு கோமகனுக்கும், புலவர் பெருமானுக்கு மிடையில் ஐம்பது வருடங்களாக வளர்ந்து வந்த நட்பானது, 1828–ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோமகனின் மரணத்துடன் முடிவடைந்தது. இப்புண் ஆறுமுன்னரே, அதில் கோலிட்டாற் போல், 1830–ம் ஆண்டு ஜூலை மாதம் அவரது மகன் ஆகஸ்டும் அவரை விடுத்து விண்ணுலகம் சென்றான்.

ஆகவே, பூங்காவனத்தின் மத்தியி லமைந்த தம் மாளிகையில் கதே தம் காரியதரிசியான எக்கர்மேன் (Eckermann) என்பவருடன் தனிமையில் வாழ வேண்டியதாயிற்று. எக்கர்மேன் 1823–ம் ஆண்டில் அவரது சேவையில் சேர்ந்தார். டாக்டர் ஜான்சனுக்கு (Dr- Johnson) பாஸ்வெல் (Boswell) எந்நிலையில் அமைந்தனரோ, அந்நிலையில் எக்கர்மேன் இல்லாவிடினும்; இவர் தாம் எழுதிய "கதேயுடன் நிகழ்ந்த உரையாடல்" என்ற நூலில், கதேயின் இறுதிக் காலத்தில் அவ ரடைந்திருந்த முதிர்ந்த அறிவுப் பான்மையையும், சீரிய ஒழுக்கத்தினையும் பற்றி நன்குகவும், தெளிவாகவும் வரைந்துள்ளார்.

அதன் பின்னர் கதே தமது நாட்டு அலுவல்களினின்றும் நீங்கினர். ஆனாலும் அந்நாட்டு அரசாட்சியின் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் மிக்க கவலையுடன் படித்துணர்வார். அவரது எண்பதாவது வயதில்கூட அவரது மதிநுட்பம் சிறிதும் குன்றவில்லை. சிறியது முதல் பெரிய காரியங்கள்வரை எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரும் ஆற்றலை அவர் வளர்த்து வந்தார். அவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் அக்காலத்து அறிஞர்களால் மிகவும் போற்றப்பட்டது. அவரது நூல்களை ஆராய்ந்து கற்கும் கழக மொன்று ஏற்படுத்தப்பட்டது. வீமரிலுள்ள அவரது இல்லத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டுப் புலவரெல்லாம் புண்ணிய யாத்திரை செய்யத் தலைப்பட்டனர். பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலு முள்ள புலவர் பெருமான் களும், நாடகாசிரியர்களும், மற்றும் கலைவாணர்களும், அவருக்குச் சிறந்த வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர்.

அவரது எண்பத்திரண்டாம் பிறந்த நாளன்று (1831–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருபத்தெட்டாம் நாள்) கார்லைல், (Carlyle) வார்ட்ஸ்வொர்த், (Wordsworth) ஸர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott), சதே (Southey), இன்னும் பதின்மூன்று ஆங்கிலப் புலவர்கள் சேர்ந்து, கதேக்குத் தங்கள் வணக்கத்துடன், அன்புமிக்க பிறந்த நாள் வாழ்த்துக்களையும் அனுப்பினர்கள். அதுவே அவரது கடைசிப் பிறந்த நாள் விழா. அதன் பின்னர் அவர் இயற்கையாகவே யுள்ள ஊக்கமும் உற்சாகமும் சிறிதும்

குன்றுது, ஆறு மாத காலத்தை வாசிப்பதிலும், உரையாடுவதிலு மாகக் கழித்தார். அவரது கடைசிச் செய்யுள் 1832–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஏழாம் நாள் இயற்றப் பெற்றது; கடைசிக் கடிதம் அதே மாதம் பதினேழாம் நாள் எழுதப்பட்டது. அம்மாதம் இருபத்திரண்டாம் நாள் நடுப்பகலுக்குச் சற்றுமுன், அவர் தமது சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணமே, மிக்க அமைதியாகத் தமது பூதவுடலை நீத்து, என்று மழியாத் தம் புகழுடம்புடன், இறைவன் திருவடி நிழலை யடைந்தார். அவரது சடலமானது, அவரது நண்பர்களான வீமர் நாட்டுக் கோமகனை கார்ல் ஆகஸ்ட், ஷில்லர் இவர்களின் சமாதிகளுக் கருகில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

இவ்வாருக அவர் "அவசரமின்றி, ஆனல் ஓய்வின்றி"* என்ற தமது சட்ட வாக்கிற் கேற்ப, தமது வாழ்க்கைப் படகை ஓட்டி முடித்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக."

* "Ohne Hast, aber ohne Rast."

# I

## சாத்தானின் சபதம்

"தேவன் தெரிந்து கொண்டவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்?"
(ரோமர் 8:33)

"நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய்......... "

நிற்கின்ற பரம்பொருளாகிய அகிலலோக நாதன் தமது அன்பர் புடை சூழ இருக்கையில் அமர்ந்திருந்தார். ரபேல், காபிரியேல், மிகாவேல் முதலான தூதர்கள் ஒரு புடை நின்று,

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப் படுத்துகின்றன. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" என ஆர்ப்பரித்தனர். மற்றொரு புடை மீட்கப் பட்ட திரளான கூட்டத்தினர் வெண்ணங்கிகளைத் தரித்துக் கையில் குருத்தோலை யேந்தி, "இரட்சிப்பின் மகிமை எங்கள் தேவனுக்கே உண்டாவதாக!" என உரத்த சத்தத்துடன் கடவுளைப் பாடிப் புகழ்ந்து கொண்டிருந்தனர். அச்சமயம் அங்கே மெபிஸ்டாபிலிஸ் (Mephistopheles) என்ற பிசாசுகளின் தலைவன் வந்து நின்றான். அவன் ஒரு காலத்தில் தேவ புத்திரரில் ஒருவனாயிருந்த போதிலும், தனது ஆணவத்தினாலே தெய்வ மகிமையைத் துறந்து சாத்தானின் உருவானவன். அவன் ஆண்டவரின் முன் வந்து நின்று, "எப்பொழுதும் தங்களது தன்மைகளை மறுதலிப்பதே என் வேலை. அன்றியும் தங்களால் தீமையென்று கருதப்படக் கூடிய பாவ

காரியங்களும், மாயையின் கிரியைகளுமே எனது இயல்பு. ஐந்தறிவுடைய மாக்களினின்றும் மனிதனை வேறுபடுத்துவதற்காகத் தாங்கள் அவனுக்கு ஆறு மறிவாகிய பகுத்தறிவை அருளிச் செய்தீர். ஆனால் அவன் அதைத் தகாத முறையில் உபயோகித்துத் தன்னை ஒரு குட்டித் தெய்வமெனக் கருதி, மிருகத்திலும் கேடு கெட்ட மிருகத் தன்மையை அடைந்துள்ளான்," எனக் கடவுளிடம் தெரிவித்துக் கொண்டான்.

அனைத்து மறிந்த ஆண்டவன், "எப்பொழுதும் மனிதனைக் குறை கூறுவதே உன் வழக்கம். பூலோகத்தில் பெரும்பாலோர் அத் தகையினராயினும், எனது அடியானாகிய பாஸ்ட்டைப் போல அதற்கு விலக்கானவர்களு முண்டு," என்றார். மெபிஸ்டாபிலிஸ் அதற்கு மறு மொழியாக, "மனிதனுக்கு அருளப் பட்டுள்ள ஆற்றலுக்கும் மேலாகத் தனது அறிவை வளர்க்க வேண்டும் என்ற மிதமிஞ்சிய பேராசையால் பாஸ்ட் தன்னைத் தானே அலட்டிக் கொள்வதால், அவன் சீக்கிரமாகவே 'தங்களது அடியான்' என்ற பட்டத்தையும் துறந்து விடுவான்!" என்றான். முக்காலமும் உணர்ந்த முன்னவன், "ஒரு செடியானது துளிர் விட்டு அரும்பத் தொடங்குங் கால், அது பூப்பூத்துக் காய் காய்க்கும் ஒரு காலமு முண்டு என்பதை அதை நட்ட தோட்டக்காரன் அறியானோ? அது போலவே தற்சமயம் பாஸ்ட் எனது சேவையில் தெளிவான சிந்தையுடனில்லாவிடினும், சீக்கிரத்தில் அவன் எனது அருளால் மெய்யொளி பெற்று என்னிடம் வந்தடைவான்" என்று பதில் அளித்தார். அதற்கு மெபிஸ்டாபிலிஸ், "தாங்கள் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் அதைத் தங்களுக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்," என்றான். ஆகவே, பராபரன் "பாஸ்ட்டை அவனது இலக்கினின்றும் தவறச் செய்ய நீ அவனை எவ்விதமான சோதனைக்கு உட்படுத்தவும் யான் சம்மதிக்கின்றேன். அவனது உயிர் மீது மட்டும் உனக்கு அதிகாரமில்லை. ஆனால், இயற்கை

யாகவே களிம்புடன் விளங்கும் செம்பானது தேய்க்கத் தேய்க்க எவ்வாறு பிரகாசம் அடைகின்றதோ, அவ்வாறே பாசத்தால் அநாதியே கட்டுண்ட ஆன்மா மீண்டும் மீண்டும் சோதனையில் வீழ்ந்த போதிலும், பதியின் அருளால் பாசம் நீங்கப் பெற்று, இறுதியில் இறைவனின் சித்த மறிந்து பதியை யடையும்" எனக் கூறி, பாஸ்டின் மீது மெபிஸ்டாபிலிசுக்கு ஆதிக்கம் அளித்தார்.

இச் சபதத்துடன் மெபிஸ்டாபிலிஸ் இறைவனின் சந்நிதி விட்டு நீங்கி, பூலோகத்திற்கு வந்து பாஸ்ட்டைச் சோதிக்கத் தொடங்கினன்.

## II

## சாத்தானுடன் ஒப்பந்தம்

"அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு.
அறிவு பெருத்தவன் (மன) நோவு பெருத்தவன்"
(பிரசங்கி 1:18)

டாக்டர் ஹென்றி பாஸ்ட்டின் (Henry Faust) தந்தையார் ஜெர்மானிய நாட்டில் ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் மக்களிடத்து மிகுந்த அன்பும் அருளும் உடையவர். ஆகவே பாஸ்ட்டும் "குலத்தளவே யாகுங் குணம்" என்ற சான்றோர் வாக்கிற் கேற்ப, சுறு சுறுப்பும், மதி நுட்பமும், உயரிய சிந்தனையும், அன்பும் நிறைந்த ஒரு சிறந்த இளைஞராகத் திகழ்ந்தனர். ஒரு சமயம் அவரது ஊரிலும், அதன் சுற்றுப் புறத்திலும் ஒரு கொடிய தொற்று நோய் உண்டாயிற்று. பிறர் துன்புறக் காணச் சகியாத அவரது தந்தையார் அச்சமயம் அம் மக்களின் கஷ்டத்தைத் தீர்க்க அரும்பாடு பட்டனர். இவ்வரிய சேவையில் பாஸ்ட்டும் தமது இளமைப் பருவத்தில் மிக்க ஊக்கத்துடன் ஈடுபட்டனர்.

நாட்கள் செல்லச் செல்ல அவருக்குத் தமது அறிவை மேலும் மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டு மென்ற அவா அதிகரித்தது. எனவே, அவர் விஞ்ஞானம், தத்துவ சாஸ்திரம், நியாய சாஸ் திரம், வைத்தியம், சமய சாஸ்திரம் ஆகிய இத் துறைகளில் தமது சிந்தையைச் செலுத்தி அவற்றில் முழுப் புலமை பெறத் தீவிரமாக முயற்சி செய்தார். அவரது முயற்சியும் ஓரளவு சித்தி பெற்றது. ஆகவே, அவரிடத்தில் நன்மதிப்பும், அன்பும் கொண்ட சிஷ்யர்கள் பலர் அவருக்கு ஏற்பட்டனர். அவர்களில் முக்கியமானவர் வாக்னர் (Wagner) ஆவார்.

அறிவை வளர்க்கும் ஆர்வமே பாஸ்ட்டுக்கு மிகுதியா யிருந்த தால், பெண்ணாசைக்கு அவர் சிறிதும் இடங் கொடுக்கவில்லை. எனவே அவர் ஒரு பிரம்மசாரியாகவே தான் ஆசிரியரா யிருந்த கல்லூரியைச் சார்ந்த ஒரு பகுதியில் வசித்து வந்தார். அவரது மாணக்கரும், சிஷ்யர்களும், மற்றும் அக்கம் பக்கத்தினரும் அவரிடமுள்ள நன் மதிப்பால் அவரைப் "பேராசிரியர் பாஸ்டஸ்" (Dr. Faustus) என அன்புடன் அழைத்து வந்தனர்.

இக் கதை துவங்கும் பொழுது பாஸ்ட் நடுத்தர வயதுடைய வரா யிருந்தார். அக் காலத்தில் அவர் கலைஞானமும், உலக ஞானமும் மிகுதியாகப் பெற்றிருந்தும், அவரது மனம் அமைதி இழந்து அல்ல லுற்றிருந்தது. வாழ்க்கையின் நோக்கத்தையும், இப்பிரபஞ்ச அமைப்பின் உட்கருத்தையும் பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லையே என்ற கவலையே அதற்குக் காரணமா யிருந்தது. இத்தகைய மனப்பான்மையுடனேயே அவர் மாந்திரீகக் கலையில் ஈடுபட்டார். இயற்கை கூறும் ஈடற்ற இரகசியங்களை மனிதன் தன் மதி வல்லமையினாலேயே அறிந்து கொள்ளக் கூடும் என்ற உறுதியுடனேயே அவர் இக் கலையைக் கற்க முற் பட்டார்.

ஓர் உயிர்த்தெழுந்த பண்டிகையின் (Easter) முன் இரவிலே அவர் மாந்திரீகத்தைப் பற்றிய நூலொன்றை வாசித்துக் கொண்டிருந்தார். ஒரு பாகத்தில் 'இயற்கையை ஆட்டுவிக்கும் பூதமானது (Earth Spirit) ஒருவன் தன்னை அழைத்த மாத்திரத்தில் உடனே தோன்றி அவனுக்கு உதவி செய்ய எந் நேரமும் காத்துக் கொண்டிருக்கிறது' என எழுதப்பட்டிருந்தது. அதைப் பற்றி மேலும் அறிய ஆவலுள்ளவராய், அவர் அதை வரவழைக்கும் மந்திரத்தை ஓத, அதுவும் ஓர் அனற் பிழம்பில் அவருக்குக் காட்சி யளித்தது. அதன் விகார வடிவமானது பார்ப்பதற்கு மிக்க பயங்கரமா யிருந்தது. ஆகவே, அவருக்கு அதைப் பார்க்கவும் பிரியமில்லை. ஆனால் அந்தப் பூதமோ, "நீ இன்னும் என்னைச் சரியாக அறிந்துகொள்ளவில்லை. நீயே என்னை வலுவில் அழைத்துவிட்டு இப்பொழுது என்னைப் பார்க்கவே பயப்படுகிறாய். உனது மன நிலையானது மிகவும் குழப்ப மடைந்துள்ளது. இப்பேர்ப்பட்ட நிலையில் என்னைப் போல் வலிமையுள்ள பூதங்களின் உதவியும், நடத்துதலும் உனக்கு மிகவும் தேவை" என உரைத்தது. அந்த பூதத்தின் அகங்காரத் தொனியைக் கேட்ட பாஸ்ட்,

"நான் சகலகலா பண்டிதன். உனக்கு நிகரானவன்"

எனத் துணிந்து கூறினர். உடனே அப் பூதம் மறைந்துவிட்டது.

அச்சமயம் அவரது சிஷ்யர்களில் முக்கியமானவ ராகிய வாகனர் வந்து சேர்ந்தார். பாஸ்ட் இருந்த மன நிலையில் அவருக்கு வாக்னருடன் உரையாட விருப்பமில்லை. ஆகையால் அவர் இரவு பன்னிரண்டு மணிக்குமே லாகிவிட்டதென்றும், மறுநாள் காலையில் பேசிக்கொள்ளலா மென்றும் சொல்லி அவரை அனுப்பிவிட்டார். பின்னர் அவர் சிந்தனையி லாழ்ந்தார்.

இவ்வாறாக எவ்விதத்திலும் அதிருப்தியும், ஏமாற்றமுமே யடைந்த பாஸ்ட் மிக்க மனத் தளர்ச்சி யடைந்தார். அறிவை

வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்ட அவர், இளமை நீங்கப் பெற்றிருந்தமையால், தாம் அத் துறையில் ஆற்றக் கூடியது சிறிதளவே யன்றோ எனத் தியக்கமுற்றார். "கற்றது கைம்மண்ணளவு, கல்லாத துலகளவென்று" ஏங்கினர். "கொள்ளித் தேள் கொட்டிக் குதிக்கின்ற குரங்கு" போல அவர் மனம் தத்தளித்தது. இந்நிலையில் அவர் தற்கொலை புரியவும் துணிந்தார்.

தாமே தயாரித்து வைத்திருந்த நஞ்சு ஒன்றைக் குடித்துத் தம் உயிரையே மாய்த்துக் கொள்ள முயன்றார். ஆனல் அச்சமயத்தில் அந் நந்நாளை அறிவிக்கும் ஆலயமணி ஒலியும், அத்துடன் பாடகரின் பண்டிகைப் பாட்டொலியும் அவர் செவியில் பட, அவை அவருக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் அன்பையும் மாண்பையும் அறிவுறுத்தின. உடனே மனம் சாந்தியடைய, அவர் தற்கொலை புரியும் எண்ணத்தைத் துறந்தார்.

கர்த்தர் உயிர்த் தெழுந்த பண்டிகையைக் குதூகலமாகக் கழிப்பது அவ்வூராரின் பரம்பரை வழக்கம். வயோதிகரும் சிறியோரும், பெண்களும் ஆண்களும், வாலிபரும் கன்னியரும், ஆசிரியரும் மாணக்கரும் ஒருங்கே கூடி, விருந்திலும், மதுபானத்திலும், களியாட்டங்களிலும், குறவைக் கூத்துகளிலும் அந்நாளைக் கழிப்பார்கள், அந்நாளின் அந்திப் பொழுதில் உலாவச் சென்ற பாஸ்ட்டும் வாக்னரும், அக் களியாட்டங்களில் கலந்துகொள்ள அவ்விடம் சென்றனர். அவ்வூரினரும் அவரை மிக்க மரியாதையுடனும், அன்புடனும் வரவேற்றனர்.

சிறிது நேரத்திற்குப் பின் அவர்களிருவரும் அதிக களைப்புற்றவர்களாய் அவ்விடத்தை விட்டு நீங்கி, தனித்த ஓரிடத்திற்கு வந்தனர். வந்து, ஆங்குள்ள ஒரு கல்லின் மீது அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். பாஸ்ட், "என் மனம் மாத்திரம்

ஒரு திட்டமான நிலையை யடைய வில்லை. ஒரு சமயம் இப் பாமர மக்களைப் போல் திருப்தியும் அமைதியும் அடைகின்றேன். மற்ெருரு சமயம் அதிருப்தியும், அவாமிகுதியும் உண்டாகின்றன. புதிதாக மாந்திரீகக் கலையில் விருப்பமும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன. மாந்திரீக சக்தி மட்டும் எனக்குக் கிட்டுமாயின், இதுவரையிலும் ஒருவராலும் அறிய முடியாததை யெல்லாம் நானறிந்து, உலகத்தையே ஓர் ஆட்டு ஆட்டிவிடுவேன்" என்ருர். இவ்வாருக அந்திப் பொழுது கழிந்து இருள் சூழத் தொடங்கியது. இருவரும் தம்மிருப்பிடம் திரும்பப் புறப்பட்டனர். அச்சமயம் ஒரு கறுப்புச் சடைநாய் வட்ட மிட்டுக்கொண்டே வந்து பாஸ்ட்டை நெருங்கிற்று. இயற்கையாகவே பிராணிகளிடத்துக் கருணையுள்ள பாஸ்ட் அதைத் தமது இருப்பிடத்திற்குத் தூக்கிச் சென்று, அதற்குப் பாலூட்டி, சீராட்டி, மெத்தையிட்டுப் படுக்க வைத்தார்.

பின்னர் அவர் பரிசுத்த வேதாகமத்தை எடுத்து, அதைமிகுந்த பக்தி விநயத்துடன் படித்து, பரி. யோவான் சுவிசேஷத்தைத் தமது தாய் மொழியில் பெயர்க்க முற்பட்டார். அவர் அப்புத்தகத்தைத் திறந்து வாசிக்கத் தொடங்கிய வுடனேயே அந்நாயானது ஒருவித ஊளையிடத் தொடங்கிற்று. அதைக் கேட்ட பாஸ்ட் அது பிசாசால் பீடிக்கப்பட்டதென எண்ணி, அப் பிசாசை ஓட்டத் தொடங்கினர். உடனே அந்நாய் உருவில் பெரிதாகியது; ஒரு புகை தோன்றிப் பின் அந்த நாய் மறைய, மெபிஸ்டாபிலிஸ் ஒரு சுற்றுப் பிரயாண மாணவனின் உடையில் தோன்றினன். தோன்றிய அவன் "எப்பொழுதும் எதையும் மறுக்கும் தன்மை வாய்ந்த ஆவி நான். இருளின் மகன். தீமையான காரியங்களை நன்ருகச் செய்து முடிக்கும் மனிதரால் அறிய முடியாத வலிமையை யுடையவன்" எனத் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டான். அன்றியும் அவன் பாஸ்ட்டுக்குத் தன்னு லியன்ற உதவியைச் செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்

தான். இவ்வாருக 'இரவு பக லில்லா' அம்மேலுலகில் ஏற்பட்ட பந்தயத்தை நிறைவேற்ற பாஸ்ட்டிடம் மெபிஸ்டாபிலிஸ் வந்து சேர்ந்தான். மனக்குழப்ப முற்ற நிலையி லிருந்த பாஸ்ட் இதைக் கேட்ட பொழுது அவனது மாயவலையில் சிக்குண்டார். அவரது அறையின் கதவில் பேயைத் தடுக்கும் சின்னமான ஓர் ஐங்கோணம் (Pentagram) வரையப்பட்டிருந்தது. அதனுல் தான் மெபிஸ்டாபிலிஸ் தானுகவே உள்ளே வர முடியவில்லை. நாயி னுருவில், பாஸ்ட்டினுல் எடுத்துக் கொண்டு வரப்பட்டான். ஆகையினுல் மெபிஸ்டாபிலிஸ் தன்னை அச்சமயம் வெளியில் விடுத்து மறுபடியும் மும்முறை அழைத்தால் வருவதாகச் சொன்னுன். பாஸ்ட் அதற்கு உடன்படாததால், மெபிஸ்டாபிலிஸ் தனது சக்தியினுல், அவரை அயர்ந்து தூங்கச் செய்து, எலியி னுதவியால் ஐங்கோணத்தை யழித்து வெளியேறினுன். பாஸ்ட் நித்திரையினின் றெழுந்து, நடந்தது கனவோநனவோ என மயங்கும் வேளையில், ஐங்கோணத்தைக் காணுது திகைத்தார். அத்தருணமே, மெபிஸ்டாபிலிஸ் கதவைத் தட்ட,பாஸ்ட் அவனை அவன் விரும்பியவாறே மும்முறை 'வா' என்றழைத்தார். அவனும் உள்ளே வந்து சேர்ந்தான்.

மனித ஆற்றல்களைவிட வலிமையும் விசித்திரமு மான வல்லமை மெபிஸ்டாபிலிசுக்கு எவ்வளவு உண்டென இருவரும் சிறிது தர்க்கித்தனர். பாஸ்ட் மெபிஸ்டாபிலிசின் வல்லமையில் நம்பிக்கை வைத்தார். அவனது உதவியால் தம்மால் முன்பு அறிந்து கொள்ள முடியாத உண்மைகளையும் உணர்ந்து கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன், மெபிஸ்டாபிலிஸ் தம் முன் வைத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கினுர்.

அவ் வொப்பந்தத்தின்படி :

மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டுக்கு இவ்வுலக வாழ்க்கையில் அடிமையாகி, அவர் மனம் வாக்குகளால் நினைப்பதையும், சொல்வதை

யும் நிறைவேற்ற வேண்டும். இதற்குப் பதிலாக பாஸ்ட் இறந்தவுடன் தமது ஆன்மாவை மெபிஸ்டாபிலிசுக்கு ஒப்புவிக்க வேண்டும்.

மேலும் பாஸ்ட் இவ் வொப்பந்தத்திற்கு வியாக்கியானமாக மெபிஸ்டாபிலிசிடம் சொன்னதாவது :—

" நான் அறிய விரும்புவதை யெல்லாம் அறிந்து, அதனு லேற்படும் உண்மையான மன அமைதி உண்டாகும் நாளே எனது கடைநாள். அப்பேர்ப்பட்ட மன அமைதியினு லேற்படும் இன்ப நிலை இன்னும் நீடிக்காதா என ஏங்கும் நேரமே, எனது கடைசி நேரமாகட்டும். என் னுயுள் முடியட்டும். நீ என் ஆன்மாவைக் கொண்டு போகலாம். உனது சேவையும் அன்றே முடிவு பெறலாம். "

இந் நிபந்தனைகள் மெபிஸ்டாபிலிசினல் ஒப்புக்கொள்ளப் பட்டன. அவன் எழுதித் தயாராக வைத்திருந்த பத்திரத்தில், அவன் கேட்டவாறே, பாஸ்ட் தமது குருதியினல் கையெழுத் திட்டார்.

## III

## மதுபானம்

" கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல் "

— குறள். ௯௩. ௫.

பாஸ்ட்டும், மெபிஸ்டாபிலிசும் பின்னர் பிரயாணத்திற்கான மாற்றுடை யணிந்து, 'சின்னதும் பெரிதுமான' உலகங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டனர். அவர்கள் வான் வழியாகச் செல்லுகையில், விரிக்கப்பட்ட ஒரு மேலங்கியே அவர்களுக்கு வாகனமாக அமைந்தது.

மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டை முதன் முதலாக ஒரு மதுக் கடைக்கு அழைத்துச் சென்ருன். அக்கடையானது சந்தடியான

தும் அருவருக்கப்படத் தக்கதுமான நடத்தையுள்ள மீதுபானப் பிரியாரால் நிறைந்திருந்தது. அவர்கள் குடி வெறியில் தங்களை மறந்தனர். இதற்கிடையில் மெபிஸ்டாபிலிஸ் தனது சக்தியால் பற்பல புதுவகை மதுபானங்களை வரவழைத்துக் கொடுத்து, அவர்களை மேலும் மேலும் குடிக்கச் செய்து மதிமயங்கி நடக்க வைத்தான், அவர்கள் குடித்து வெறித்துத் தங்கள் வாக்கிலும், நடத்தையிலும் மிருகத் தன்மையுடன் நடக்கலானார்கள். பாஸ்ட்டை இவ்வாறு குடி வெறியில் ஆழ்த்தி, அவர் தமது மனக்குழப்பத்தை மறந்து மெய்ம் மறந்திருக்கச் செய்ய வேண்டுமென்பதே மெபிஸ்டாபிலிசின் நோக்கம். ஆனால், "குடியானது ஒருவரது மதியை மயக்கி அவரது மனிதத் தன்மையை மறக்கச் செய்யும்" எனக் கூறி, பாஸ்ட் அதை இகழ்ந்து தள்ளினர்.

"உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்"

என்பதே அவரது கருத்து. அந்த மதுக்கடையில் அவர் கண்ட காட்சி அவருக்கு மிகுந்த அருவருப்பை அளித்ததால், அவர் அவ் விடத்தைவிட்டு உடனே அகல விரும்பினர்.

## IV

## மாந்திரீகம்

"மனித இயல்புக் கப்பாற் பட்ட கலையில் அதிகம் ஈடுபடுவது மிகுதியும் இன்னல் தரும்."

— கன்பியூசியஸ்.

பின்னர் மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டை ஒரு சூனியக்காரியின் 'பாகசாலைக்கு' அழைத்துச் சென்றான். அவ்வறையின் சுவர்களிலும், கூரையிலும் சூனியத்திற் குரிய விகாரமான கருவிகளெல்லாம் தொங்கவிடப் பட்டிருந்தன. ஆணும் பெண்ணு

யாகிய இரு மனிதக் குரங்குகள் ஒரு பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தன. இம் மனிதக் குரங்குகளின் பேச்சைக் கேட்பதில் மெபிஸ்டாபிலிஸ் ஈடுபட்டிருக்கையில், பாஸ்ட் அங்குள்ள ஒரு மாயக் கண்ணாடிக் கருகில் சென்று, அதில் தெரிந்த ஓர் அழகிய பெண் ணுருவத்தைக் கண்டு அதைப் பார்த்துக் கொண்டே யிருந்தார். அதனைப் பார்த்த மாத்திரத்தில் அவரது காம உணர்ச்சிக ளெல்லாம் உயிர் பெற்று எழுந்தன. அதனால் அவர் அச் சூனியக்காரி தயாரித்துக் கொடுத்த ஒரு மருந்தைக் குடித்து, இளமை யடையச் சம்மதித்தார். அவ்வாறே அதைக் குடித்து, அவரது முதுமைப் பருவம் நீங்கப் பெற்று, இளமைப் பருவ முடையவராக விளங்கினர். அத்துடன் அவரது காம உணர்ச்சிகளும் வளர்ந்தன. ஆனால் அவரது மதிநுட்பமும், சிறந்த உணர்ச்சிகளும் சிறிதும் குறையவில்லை. அவர் மீண்டும் அம் மாயக் கண்ணாடி முன் அவ் வழகிய மங்கையைக் கண்டு மகிழச் சென்றார். மெபிஸ்டாபிலிஸ் அத்தகைய எழில் நங்கையர் பலரை உண்மை உருவுடனேயே பாஸ்ட்டுக்குக் கொண்டு வந்து தருவதாக வாக்களிக்க, இருவரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

## V

## மார்கரெட்

> “ காதலுக்குக் கண்ணில்லை. காதலரும்
> பின்வருவது பற்றி எண்ணு வதில்லை.”
>
> —ஷேக்ஸ்பியர்

இங்ஙனம் பாஸ்ட்டும் மெபிஸ்டாபிலிசும் சுற்றுப்பிரயாணம் செய்து ஒரு நகரத்தை யடைந்தனர். அந்நகரத்தில் பதினைந்து ஆண்டுகள்கூட நிரம்பாத மார்கரெட் என்ற ஓர் இளம் பெண் இருந்தாள். அவளது தந்தை ஒரு குடியானவன். அவளுக்கு

வாலன்டைன் என்ற ஒரு தமையனும், ஒரு தங்கையும் இருந்தனர். அவள் தங்கை பிறப்பதற்கு முன்பே அவள் தந்தை காலமானார். அவர் தம் மனைவிக்கு அந் நகரின் ஒரு கோடியி லிருந்த ஒரு சிறு வீட்டையும் அதைச் சார்ந்த தோட்டத்தையும் விட்டுச் சென்றார். சிறிது காலஞ் சென்ற பின் அவள் தங்கையும் நீடித்த நோயால் பிடிக்கப்பட்டு இறந்தாள். வாலன்டைன் ஒரு படையில் சேர்ந்து போர் வீரனன். வாலன்டைன் வெளியூருக்குச் செல்ல நேர்ந்த தால், அவ்வீட்டில் மார்கரெட்டும் அவள் தாயும் மாத்திரம் வசித்து வந்தனர். அவர்கள் பணியாட்கள் யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆதலால் வீட்டிலுள்ள வேலைகள் யாவையும் பெரும்பாலும் மார்கரெட்டே கவனித்து வந்தாள். என்ற போதி லும், அவள் தாய் சிறிய காரியங்களையும் செம்மையாகச் செய்ய வேண்டு மென்ற எண்ண முடையவ ளாதலால், அவளைத் திருப்தி செய்வது மார்கரெட்டுக்குக் கடினமாகவே இருந்தது.

மார்கரெட் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவள். அவளுக்குத் தன்னை அலங்கரித்துக் கொள்ள விலையுயர்ந்த ஆடை யாபரணங்கள் அதிகம் இல்லை. எனினும் 'யாரே அழகுக் கழகு செய்வார்!' என்று கூறத் தக்கதாய் அவளது மேனி யாதொரு செயற்கை யழகும் தேவையின்றி இயற்கை யழகுடன் திகழ்ந்தது.

"சேற்றிலே தாமரையும் சிழுடைய மீன்வயிற்றில்
போற்று மொளிமுத்தும் புறப்படுதல்......"

போல, அவளது எளிய உடை அவளது பேரழகை மேலும் எடுத்துக் காட்டியது. அன்றியும் அவள் இயற்கையாகவே பெண் களுக் குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய குணங்களை யுடையவள். குழந்தை யுள்ளம் படைத்தவள். தெய்வத்தினிடம் மிகுந்த பக்தியுடையவள். தாயிடத்தில் அளவற்ற நன்மதிப் புடையவள். தமையனிடத்தில் நிறைந்த அன்புள்ளவள். அவளது

மிருண்ட பார்வையையும், அடக்க முடைமையையும் பார்த்து, அவ்வூரார் அவளிடம் மிகுந்த நன்மதிப்பும் அன்பும் கொண்டனர். ‘பெண்களின் திலக’ மெனப் புகழ்ந்து போற்றினர். குற்ற யுக்தி நிறைந்த மார்த்தாள் அவளுக்குத் தோழியாக வாய்த்தது அவளது விதிப் பயனே யாகும். இந்த மார்த்தாள் சிலகாலமாகத் தன் கணவனுடைய இருப்பிடம் தெரியாததால் தனிவாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாள். மார்கரெட் அடிக்கடி அவள் வீட்டிற்குச் சென்று அவளுடன் அளவளாவியிருந்து வருவது வழக்கம்.

மார்கரெட் தன் வீட்டின் இடைவிடா அலுவல்களின் மத்தியிலும், அவ்வூரிலுள்ள கோவிலுக்குக் காலைதோறும் ஒழுங்காகப் போகத் தவறமாட்டாள்.

ஒருநாள் காலை மார்கரெட் கோவிலிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், பாஸ்ட் அவளைப் பார்க்க நேர்ந்தது. அவளது இயற்கை யழகும், எழிலும் அவரது மனத்தைக் கொள்ளை கொண்டன. மெபிஸ்டாபிலிஸ் மூலம் பெற்ற ஆண்மை நிறைந்த அவரது இளமைப் பருவத்தால், அவர் தமது காம இச்சையை அடக்க இயலாது, எங்ஙனமேனும் அக்கன்னிகையைப் பெறவேண்டு மென்ற எண்ணத்தைக் கொண்டார். கோவிலிலிருந்து அவள் திரும்புகையில் அவளைச் சந்தித்து அவளுடன் பழக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போயின. அவர் தமது காதல் உணர்ச்சிகளைத் தெரிவிக்க முற்படும்போது, அவள் தனக்கு இயற்கையாக அமைந்திருந்த அச்சத்தினாலும், மடமையினாலும் அவருடன் பேச முன் வரவில்லை. பின்னர் அவர் தமது விருப்பத்தை மெபிஸ்டாபிலிசுக்கு வெளியிட்டு, அன்றிரவே அவளை எங்ஙனமேனும் தான் அடைவதற்கு ஆவனவற்றைச் செய்யவேண்டு மெனக் கட்டளையிட்டார். பாஸ்ட்டைத் தனது வலையில் சிக்க வைக்க இது ஒரு சிறந்த வழியெனக் கண்டு, மெபிஸ்டாபிலிஸ் மிகுந்த மகிழ்ச்சி

யுடன் இதில் அவருக்கு உதவி புரிய முன் வந்தான். மார்கிரெட்டும், அவள் தாயாரும் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டை மார்கரெட்டின் சிறிய, ஆனால் ஒழுங்குள்ள, அறைக்கு அழைத்துச் சென்று, அவரிடம் விலையுயர்ந்த ஆபரணங்களடங்கிய ஒரு சிறு பேழையைக் கொடுத்து, அதை அவளது உடைகளுடன் வைக்கும்படி செய்தான். பின்னர் இருவரும் அவ்விடத்தினின்றும் மறைந்தனர்.

அன்று மாலை வீடு திரும்பிய மார்கரெட், தன் உடைகளின் நடுவிலிருந்த இந்தப் பேழையைக் கண்டு வியப்புடன் எடுத்துத் திறந்து பார்த்தாள். அதிலுள்ள விலையுயர்ந்த அணிகளைக் கண்டு மேலும் வியப்புற்று, அவற்றை அணிந்துகொள்ளத் தொடங்கினாள். அவற்றை அணிந்து தன் அழகையே ஆடியில் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். அச்சமயம் அங்கு வந்த அவள் தாய் அதைப் பார்த்துவிட்டாள். அவ்வணிகள் அவளுக்குக் கிடைத்த விதத்தை அவள் தாய் கேட்டறிந்ததும், ஒருவித திகில் அடைந்தாள். பிசாசின் தந்திரமாயிருக்குமோவென எண்ணினாள். அவ்வணிகள் ஏதோ தவறான முறையில் கிடைத்தவை யெனக் கூறி, அவள் கோவில் குருவை வரவழைத்து, அவருக்கு எல்லாவற்றையும் சொல்லிப் பின்னர் அவற்றைக் கோவிலுக்கே காணிக்கையாகக் கொடுத்துவிட்டாள். மார்கரெட்டோ அவ்வணிகலன்களையும், முக்கியமாக அவற்றைத் தனக்கு அருமையாக அளித்தவரையும் பற்றி நினைத்து மனதுருகினாள். இவ்வாறாக அவ்வணிகலன்கள் அப்புனித மங்கையின் மனத்தில் மெபிஸ்டாபிலிசும் பாஸ்டும் நினைத்தவாறே கிரியை செய்யத் தொடங்கின.

மெபிஸ்டாபிலிஸ் இவற்றை அறிந்த பொழுது பாஸ்ட்டைத் திருப்தி செய்ய, அதைவிடச் சிறந்த ஆபரணங்களடங்கிய வேறொரு பெட்டகத்தைக் கொணர்ந்து, அதை மறுபடியும் மார்கரெட்டின் ஆடைகளுடன் வைத்துவிட்டான். மார்கரெட்

திரும்பவும் ஓர் அணிகலப் பெட்டியைக் கண்டு மகிழ்ந்தாள். ஆனால் அதைப் பற்றித் தன் தாய்க்கு ஒன்றும் கூறவில்லை. தன் தாய்க்கு அவள் பயந்ததனால், அவள் அப்பெட்டகத்தை எடுத்துக் கொண்டு மார்த்தாளிடம் சென்று, முழு விவரத்தையும் கூறி அவளது ஆலோசனையைக் கோரினாள். அவள் அதைத் தாய்க்குத் தெரிவிக்க வேண்டா மென்றும், அவ்வழகிய ஆபரணங்களைத் தனிமையில் அணிந்து அழகு பார்த்து மகிழலா மென்றும் ஆலோசனை கூறினாள்.

அவர்க ளிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மெபிஸ்டாபிலிஸ் மார்த்தாளிடம் வந்து, தான் அவள் கணவனின் நண்ப னென்றும், அவனிடமிருந்து அவளுக்குச் செய்தி கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தான். அவள் கணவன் இறந்து விட்டா னென ஒரு பொய்யைப் புனைந்து கூறினான். மேலும், " அதை உனக்கு நிரூபித்துக் காட்ட வேண்டுமாயின், நீ இன்று மாலை மார்கரெட்டை உனக்குச் சாட்சியாகக் கொண்டு, என்னையும், என் நண்பரையும் உன்னுடைய தோட்டத்தில் சந்திக்கவேண்டும். அப்பொழுது தகுந்த சான்றுடன் நான் உனக்கு அதை நிரூபிக்கிறேன் " எனக் கூறினான். அவளும் அதற்கு உடன்பட்டாள்.

அந்தி மயங்கும் வேளையில் அவள் மார்கரெட்டுடன் சென்று அங்கு பாஸ்ட்டையும், மெபிஸ்டாபிலிசையும் சந்தித்தாள். மெபிஸ்டாபிலிஸ் தனது தந்திரத்தால் மார்த்தாளுடன் உரையாடி அவளது கவனத்தைக் கவர்ந்து கொள்ள, பாஸ்ட்டும் மார்கரெட்டும் தனிமையில் சந்திக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. பளிங்கு போன்ற களங்க மில்லாத உள்ளம் படைத்தவளும், ஆடவருடன் யாதொரு விதமான சல்லாபமும் செய்து அறியாதவளு மாகிய மார்கரெட் பாஸ்ட்டின் அழகிலும், அவரது இன்ப மொழிகளிலும் இழுப்புண்டு அவரிடம் தனது மனதைப் பறிகொடுத்தாள்.

பாஸ்ட்டின் காதலை அவள் ஏற்றுக் கொண்டதுமன்றி, "அன்பரே! நான் உம்மை என் முழு மனதாலும் காதலிக்கிறேன்" எனத் தன் காதலையும் தெரிவித்தாள்.

பாஸ்ட் தமது காம உணர்ச்சிகளுக்கு முற்றிலும் அடிமையானார். தாம் அதுவரையிலும் அநுபவித்திராத இன்ப உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. மார்கரெட்டின் வனப்பு வாய்ந்த மேனியை அநுபவிக்க, அடக்க முடியாச் சிற்றின்ப உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று. தனது புதிய வாழ்வில் அன்றுதான் முதல் முதலாகத் தன் கூட்டாளியான மெபிஸ்டாபிலிசின் இன்றியமையாச் சேவையைப் பாராட்டினர்.

ஆனாலும் தனிமையாக இருக்கும்பொழுது, அவர் மார்கரெட்டுடன் நடத்தும் காதல் விளையாட்டுகள் ஒழுங்கற்றவை என்ற உணர்ச்சி மனத்தை வாட்டியது. வீடு வாசல் ஒன்று மில்லாது நாடோடியாகச் சாத்தானுடன் ஊர் சுற்றும் தன்னால் மார்கரெட்டுக்கு யாதொரு நன்மையும் செய்ய முடியா தென்றும், உலக மறியாத ஒரு சிறு பெண்ணின் வாழ்வையும், அமைதியையும் குலைக்கின்றேமே என்றும் வருந்தினர். அவருக்கு இயல்பாக அமைந்திருந்த நற்பண்புகள் அவளது தொடர்பை விட்டுவிடுமாறு தூண்டின.

மார்கரெட்டின் மனமும் அலைமோதத் தொடங்கியது. ஆடவரோடேயே அதுவரை பழகி யறியாததால் அவளுக்குள் மறைந்து கிடந்த காதல் உணர்ச்சிகள் வீறிட்டு எழுந்தன. பாஸ்ட்டிற்காகவும், அவரது அன்பின் அரவணைப்புகளுக்காகவும் அவளது மனம் ஏங்கியது.

இங்கிலையை மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டுக்குச் சாமர்த்தியமாகத் தெரிவித்து, அவரது தூய எண்ணங்களைக் கலைத்து, காம உணர்ச்

சிகளை மீண்டும் தூண்டிவிட்டான். அதன் பேரில் பாஸ்ட்டும் மார்கரெட்டின் விஷயத்தில் துணிவு கொண்டார்.

மறு நாள் மாலையில் காதலர்கள் மார்த்தாளின் தோட்டத்தில் மீண்டும் சந்தித்தனர். மார்க்ரெட் பாஸ்ட்டை அவரது மதக் கொள்கை, கோவிலுக்குப் போகும் வழக்கம், கடவுள் விசுவாசம் இவைகளைப் பற்றி வினவினாள். அதற்கு பாஸ்ட், "இந்தச் சிக்கலான விஷயங்களைப்பற்றி நினைத்து ஏன் உன் பொன்னான மனத்தை வாட்டிக் கொள்ளுகிறாய்? என் அன்பைப்பற்றி உனக்கு ஒரு சந்தேகமும் வேண்டாம். நான் நேசிக்கிறவர்களுக்காக என் உயிரையும் கொடுப்பேன். கோவிலுக்குப் போவதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை.

"மேலும் 'அண்டமுமாய், பிண்டமுமாய், அளவிலாத ஆருயிருக் கோருயிராய் அமர்ந்த' கடவுளைக் கண்டவரார், கேட்டவரார்? 'கடவுள், கடவுள்' என்று சதா சொல்லிக்கொண்டிருப்பவர்களில் எவ்வளவு பேருக்கு அவரிடம் மெய்யான விசுவாசம் உண்டு?

"நிற்க, நான் கண்கூடாகப் பார்ப்பதையும், காரியம் செய்வதையும், அதை யூகமாகச் செய்வதற்கான அறிவையும்தான் விசுவாசிக்கிறேன். நம்மைச் சுற்றியுள்ள இயற்கை அவரைப்பற்றிச் சொல்லவில்லையா? நம்மிருவரையும் எடுத்துக் கொள்வோம். நமது காதல் அளவிடமுடியாத இன்ப நிலை யல்லவா? அந்த இன்ப வெள்ளத்தில் நாம் மெய்ம்மறந்து விடுகிறோம். அந்த இன்ப உணர்ச்சி தெய்விகமானது. அதற்கு நீ என்ன பெயர் கொடுத்தாலும் சரி, என்னைப் பொறுத்தவரையில் அதற்குப் பெயரில்லை. பெயர் கொடுத்து வியாக்கியானம் செய்வது அந்தத் தெய்விக ஒளியை மறைத்துத் தடைசெய்வது போலாகும்" என்று உணர்ச்சியுடன் கூறினார்.

ஒருவாறு திருப்தியடைந்த மார்கரெட் பின் மெபிஸ்டாபிலிஸ் மீது தன்னை யறியாது ஏற்படும் வெறுப்பை, "நான் தங்களுடன் இன்புற்றிருக்கும் பொழுது, தங்கள்மீது எனக்குள்ள அன்பி னாலே என்னையே முழு மனதோடு தங்களுக்குத் தத்தம் செய்கிறேன். ஆனால் மெபிஸ்டாபிலிஸ் அண்மையி லிருக்கும் பொழுது, எனது அன்பின் பெருக்கத்திற்குத் தடை ஏற்படுவது போல் தோன்றுகிறது. அன்றியும் நம்மை அவன் எவ்விடத்திலாவது சந்தித்தால், தங்கள் மீது எனக்குள்ள காதல் எங்கோ பறந்து போய்விடுவது போல் தோன்றுகிறது. அவன் முன்னிலையில் என்னால் கடவுளை நினைக்கவும் முடியவில்லை" என எடுத்துக் கூறினள்.

பாஸ்ட் அன்று இரவே அவளது இல்லத்தில் சந்திக்க அவளை இணங்கச்செய்து, அவள் அன்னையை அயர்ந்து தூங்கவைக்கும் ஒரு மயக்க மருந்தையும் கொடுத்துச் சென்றார். அன்றிரவு மார்கரெட்டின் அன்னைக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. குறித்த நேரத்தில் பாஸ்ட்டும் வந்து சேர, இருவரும் ஒன்றுகூடி இன்ப நிலையில் ஆழ்ந்தனர். மார்கரெட்டும் தன் கன்னித் தன்மையை இழந்தாள். இவ்வாறான களவுக் காதல் நாடகம் சில நாள் நடைபெற்றது.

ஒரு நாள் நள்ளிரவில் பாஸ்ட்டும் மெபிஸ்டாபிலிசும் அவ் வீட்டை விட்டு வெளியேறுகையில், தன் தங்கையின் தவறான நடக்கையைக் கேள்விப்பட்டுத் திடீரென விடுமுறையில் வந்த மார்கரெட்டின் தமையனான வாலன்டைனைச் சந்தித்தனர். அவ் வேளையில் அவர்களை அங்கே கண்டதால் வாலன்டைன் சந்தேக முற்று, அவர்களை வினவ, அதனால் சச்சரவு ஏற்பட்டு, பாஸ்ட்டும் வாலன்டைனும் வாட்போர் புரிந்தனர். மெபிஸ்டாபிலிசின் சக்தியால் வாலன்டைனின் கை திமிர் வாதத்தால் பீடிக்கப்பட்டது. பாஸ்ட் வாலன்டைனை மரணத்துக் கேதுவான காயமுண்டாகக் குத்தினார். இதற்குள் அவ்விடத்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட, மார்த்

தாள், மார்கரெட் உட்படப் பலரும் அவ்விடத்தில் ஒன்றுகூடி விட்டனர். தங்கையைச் சபித்த சாபமொழிகளுடன் வாலன்டைன் மரண மடைந்தான். தூக்க மருந்தினால் மார்கரெட்டின் தாயும் என்றும் விழிப்பில்லா நித்திரையி லாழ்ந்துவிட்டாள். வாலன்டைன் குற்றுயிராய்க் கீழே விழுந்தவுடனே, மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டைத் துரிதப்படுத்த, இருவரும் அவ்வூரைவிட்டு நீங்கினர்.

மார்கரெட் அடையக்கூடிய அபவாதத்தை பாஸ்ட் உணராமலில்லை. உலக மறியா ஒரு பச்சிளங் கன்னிகைக்கு அவர் இழைத்த தீங்கானது அவரது மனத்தை வாள்போல் அறுத்தது.

“ வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின் ”.

பாஸ்ட் மார்கரெட்டை மறக்கும்படி செய்ய மெபிஸ்டாபிலிஸ் தனது தந்திரத்தைக் கையாடலானான். ‘ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்’ ஐயந்திரிபறக் கற்று அதனால் தன்னறிவைப் பெருக்க பாஸ்ட்டுக்குள்ள பேரவாவை அவன் நன்கறிவான். அவன் பாஸ்ட்டைப் பல விடங்களுக்கு அழைத்துச் சென்று பல நூதனக் காட்சிகளையும் காண்பித்து, மார்கரெட்டை மறக்கச் செய்யக்கூடிய சில சிற்றின்பங்களில் ஈடுபடச் செய்தான். இவ்வாறாகச் சில மாதங்கள் கழிந்தன. கடைசியில் அவன் பாஸ்ட்டின் சிந்தனையை மாந்திரீகக் கலையின் சில ஆபாசக் காட்சிகளில் செலுத்தித் தன் காரியத்தைச் சாதிக்க எண்ணினான். இதற்காக அவன் பாஸ்ட்டை ஓரிரவு பிராக்கன்* மலைக்கு அழைத்துச்

---

* **Brocken** பிராக்கன், ஜெர்மனியிலுள்ள ஹார்ஸ் **(Harz Mountains)** மலைத்தொடரின் உயர்ந்த சிகரம். பதினைந்தாவது நூற்றாண்டில் இது சூனியக்காரர்களின் ஆண்டுவிழா கொண்டாடும் இடமாகக் கருதப்பட்டது. இவ்விழா வழக்கமாக மே மாதம் முதல் நாளிரவு கொண்டாடப்படும்,

பாஸ்ட் பிராக்கன் சிகரத்திற்குச் செல்வதை, இவ்வுலகில் சாமார்த்தியமான சிலர் பிறர் முயற்சியைக் கொண்டு தங்கள் வாழ்க்கையில் மிகுந்த பலனடைய முயற்சிப்பதை உருவமாகக் கதே குறிப்பிடுகிறார். இந்தப் பகுதியில், உலகப்பற்றுகளின் கொடும் போக்கையும், வெளி ஆடம்பரத்தையும், சூனியக்காரர்களின் வெறியாட்டங்களின் மூலம் கதே மிகவும் அழகாகச் சித்தரித்துள்ளார்.

சென்று அருவருக்கப் படத்தக்க சூனியக்காரர்களின் களியாட்டங்களில் கலந்து கொள்ளச் செய்தான்.

பாஸ்ட் ஓர் அழகான இளஞ் சூனியக்காரியுடன் நடனஞ் செய்து கொண்டிருக்கையில், திடீரென மார்கரெட்டின் நினைவும், அதைத் தொடர்ந்தாற் போல் அவளது நிலைமையும் அவருடைய மனக்கண் முன் திரைப்படம் போல் தெளிவாகத் தோன்றலாயின. மார்கரெட்டுக்கு ஒரு குழந்தை பிறந்ததையும், அதனால் அவளுக் கேற்பட்ட அவமானத்தையும், அந்த அபவாதச் சொற்களைச் செவியுற்ற மார்கரெட், அதைப் பொறுக்க முடியாமல் அம் மகவைத் தண்ணீரில் மடியச் செய்ததையும், அதன் பயனாக அவளைக் கொடிய தண்டனைக் குட்படுத்த அவளைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருப்பதையும் பற்றி அறியலானார். அறிந்து அளவிலாத் துயர் கொண்டார்.

இதற்காக பாஸ்ட் மெபிஸ்டாபிலிஸ் மீது சினங்கொண்டு, தானே இவ்வளவுக்குங் காரணமா யிருந்த போதிலும், 'மார்கரெட்டின் துன்ப காலத்து அவளைத் தனியே விடுத்து, அதனால் அவள் யாதொரு உதவியு மின்றி, இப்பொழுது இவ்வளவு கீழ் நிலையை அடையும்படி செய்ய நீ ஏன் அங்கிருந்து என்னை இழுத்துக்கொண்டு வந்தாய்?' எனச் சீறினார். ஆனால் மெபிஸ்டாபிலிஸ் சற்றும் தயக்கமும் உணர்ச்சியு மின்றி, "இவ்வாறு மானமழிக்கப்பட்ட பெண்களில் இவள் ஒருத்தி அல்லவே?" எனப் பதிலுரைத்தான்.

பாஸ்ட் எப்படியாவது மார்கரெட்டைக் காப்பாற்றத் தீர்மானித்தார், அவ ளிருக்குமிடத்திற்குத் தன்னை அழைத்துப் போய் அவளை அன்றிரவே விடுதலை செய்ய உதவி செய்யும்படி மெபிஸ்டாபிலிசை கட்டாயப் படுத்தினார். மெபிஸ்டாபிலிஸ் தருவித்த இரு கருப்பு மாயக் குதிரைகள் மீதேறிச் சென்று இருவரும், மார்கரெட் இருந்த சிறைச்சாலையை யடைந்தனர். தனது சக்தியால்

மெபிஸ்டாபிலிஸ் அந்தச் சிறைக்கூடத்துக் காவலாளர்களைத் துயி லாழ்த்தி, அவர்களிடமிருந்து சிறைச்சாலைத் திறவு கோல்களைக் கைப்பற்றினன். அவற்றின் உதவியால் பாஸ்ட் மார்கரெட் இருந்த அறையை யடைந்தார். தாங்கொணுத் துயரத்தாலும் அவமானத்தாலும் மார்கரெட் சித்த சுவாதீன மிழந்து கண்டபடி பிதற்றிக் கொண்டிருந்தாள். அதனல் அவள் முதலில் பாஸ்ட்டை அறிந்து கொள்ள முடியவில்லை. இதைக் கண்ட பாஸ்ட்டின் மனம் வெகு வேதனைப்பட்டது. பலமுறை அவளைக் கனிவுடன் அழைத்த பின்பு, அவள் சிறிது நேரமே சுய அறிவு வரப்பெற்று, அவருடன் சிறைச்சாலையை விட்டு வெளியேறவும் தயாரானுள். கதிரவன் உதிக்கும் நேரம் சமீப மாயிற்று. அத்துடன் தனது வல்லமை அழிந்து விடுமே என்ற ஆத்திரத்துடன் மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டை அழைத்துச் செல்ல அச்சமயம் அங்கே வந்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில், அவளுக்கு அந்தப் பேயுருவிடத் தில் தோன்றியிருந்த பழைய வெறுப்பும், அவநம்பிக்கையும் திரும்பிவந்தன. அன்றியும் அவனது கூட்டுறவை அவள் சிறிதும் விரும்பாததால், அவள் தனது முடிவை மாற்றி, பாஸ்ட்டுடன் வெளியேற மறுத்தாள். கடைசியாக அவள் மண்டியிட்டு, "ஆண்டவரே, உமது நியாயத் தீர்ப்புக்கு நான் என்னை ஒப்படைக் கிறேன். பரமபிதாவே, எனது ஆத்மாவை ரட்சியும். தூதர்களே, பரிசுத்தவான்களே, என்னைச் சுற்றிப் பாளையமிறங்கி என் ஆத் மாவைக் காத்துக் கொள்ளுங்கள்" என மன்றுடினுள்; பின்னர் பாஸ்ட்டின்புறம் திரும்பி, "ஹென்றி! தங்களைப் பற்றி நினைக்கும் பொழுது என் உள்ளம் பதறுகிறதே!" என்றுள். அச்சமயம் வானத்திலிருந்து, "அவளது ஆன்மா ரட்சிக்கப்பட்டது!" என ஓர் அசரீரி உண்டாயிற்று.

"ஹென்றி! ஹென்றி!" என்ற மார்கரெட்டின் கடைசி வார்த்தைகள் காதில் விழ, பாஸ்ட் மெபிஸ்டாபிலிசினல் அவ்விடத் தினின்றும் சீக்கிரமாக வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.

பொழுது புலர்ந்ததும் அவளுக் கிடப்பட்ட தண்டனை நிறைவேற் றப்பட்டது.

## VI

## இடை நிகழ்ச்சிகள்.

" ஆழ்ந்த நித்திரை அலைமோதும் மனதிற்கு அமைதி அளிக்கும். "

— கெட்ஸ்.

இதன் பின்னர் தம் 'பாஸ்ட்' நாடகத்தின் இரண்டாவது பாகத்தின் துவக்கம் வரை, பாஸ்ட்டும் மெபிஸ்டாபிலிசும் என்ன செய்து கொண்டிருந்தனர் என்பதைப் பற்றி கதே நேர்முகமாக ஒன்றும் கூறவில்லை; ஆனால் நாடகத்தில் கூறப்படும் ஒரு சில வாக்கியங் களிலிருந்தும், உரையாசிரியர்கள் பலரின் விரிவுரைகளி லிருந்தும், இடைக்காலத்தில் நடந்த சம்பவங்களை ஒருவிதமாக ஊகித்துக்கொள்ளலாம். இருவரும் சில ஆண்டுகளாகத் தங்கள் வேலையில் மிக்க சிரத்தை யெடுத்தனர் என்பது எல்லா உரை யாசியர்களின் கருத்து மாகும். பாஸ்ட் தமது மரணத்திற்கு முன் கூறும், "எனது வாழ்க்கையில் அரிய பல செயல்களை யாற்றி, அத்துடன் எனது மிகுந்த வலிமையினாலே உலகத்தையே ஆட்டி வைத்தேன்" என்ற மொழிகளே, அக்காலத்தில் பாஸ்ட்டின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றன என் பது மொழி பெயர்ப்பாளர் ஜோனத்தான் பர்ச் (Jonathan Birch) என்பவரின் கருத்தாகும்.

மற்றும் பாஸ்ட் பின்னால் ஒரு சந்தர்ப்பத்தில், "இவ் வுலகமே இன்னும் உயர்ந்த சேவை புரிய இடமளிக்கும்" என்று கூறியதும், "இந்தச் சிறிய உலகத்தையும், பின் பெரிய உலகத்தையும் பார்க் கலாம்" என்று முன்னால் மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டுக்குக் கூறியதும், பாஸ்ட்டுக்குப் பேரண்டத்தின் இரகசியங்களை யறிய

வேண்டு மென்றிருந்த அவாவும் சில நிகழ்ச்சிகளை யூகிக்க இடந் தருகின்றன. எல்லாக் காரியங்களையும் நன்ருக ஆராய்ந்து அவற்றைத் தமது விருப்பத்திற் கேற்பச் செய்து முடிக்கும் ஆற்றல் பாஸ்டடுக்கு இருந்தது. எனவே, உலக ஞானத்தையும், இயற்கை காட்டக் கூடிய புதுமைகளையும் ஆராய்ந்து அநுபவிப்பதையே நோக்கமாகக் கொண்டதால், அக்காலத்தில் அவரது மனம் அலை மோதிக் கொண்டிருந்தது. பாஸ்ட்டை எப்பொழுது, எவ்வித மாகத் தன் மாய வலையில் சிக்க வைக்கலா மென மெபிஸ் டாபிலிஸ் அவரைச் சுற்றித் திரிந்தான். மனிதரைத் தமது நேர்மை யினின்றும் தவறச் செய்வதே அவனது தொழிலாயினும், ஆண்ட வரோடு செய்து கொண்ட பந்தயத்தில் வெற்றி பெற, அவன் பாஸ்ட்டின் விஷயத்தில் இன்னும் அதிகமான ஊக்கத்துடன் கிரியை செய்திருக்க வேண்டும். அன்றியும் அவன் பாஸ்ட் மனதி லிருந்து மார்கரெட்டின் பரிதாபகரமான முடிவை மறக்கச் செய்வதற்கு, அவரை மாய மந்திரங்களுக்குப் பேர்போன எகிப்து முதலிய தூர தேசங்களுக்கு அழைத்துச் சென்று, ஆங்கு கையாளப்படும் பல திறப்பட்ட மாரண வித்தைகளை அவருக்குக் காண்பித்திருக்க வேண்டும் என்றும் கொள்ளலாம்.

ஆனல், அவனது எண்ணத்திற்கு மாருக, இவை யெல்லாம் பாஸ்ட்டின் மனதில் ஒருவித அமைதி யின்மையையும், பச்சாத் தாபத்தையும், ஏமாற்றத்தையுமே விளைவித்தன. இவற்றின் பயனுக பாஸ்ட் மனதிலும் சரீரத்திலும் தளர்ச்சி யடைந்து, மூளையிலும் குழப்ப முற்று, சித்த சுவாதீனம் இழந்தவர் போல் நீண்ட நித்திரை யில் ஆழ்ந்தார்.

வசந்த கால ஆரம்பத்துடன் அவரது சரீரமும் மனதும் திடன் கொண்டு பழைய நிலையை யடைந்தன. இன்பம் பயக்கும் இனிய இயற்கைக் காட்சிகளுக் கிடையில் வன தேவதைகள் அவரைச் சூழ்ந்து நிற்க, ஒரு நாள் அதிகாலையில் பாஸ்ட் மூர்ச்சை

தெளிந் தெழுந்தார். அவரது மனம் இழந்த அமைதியை ஓரளவு மீண்டும் பெற்றிருந்தது. அவரது ஆவி உற்சாகம் அடைந் திருந்தது. தன்னைச் சுற்றியுள்ள இயற்கை வனப்பை அநுபவிக் கும் ஆற்றலையும் அவர் மறுபடியும் பெற்றிருந்தார். அவர் ஒரு கனவு கண்டு விழிப்பவரைப் போல, முன் நிகழ்ந்தவற்றின் நினைப்புச் சிறிது மின்றி, தெளிந்த புத்தியுடனும், மனதுடனும் எழுந்திருந்தார். ஆனால் எங்கோ மறைந்துள்ள ஓர் இயற்கை யுணர்ச்சி அவருக்கு மார்கரெட்டைப் பற்றிய நினைப்பை மாத்திரம் கொடுத்தது. அவர் உணர்வற்றிருந்த காலத்தும், அவருக்கு மாந்திரீகக் கலையிலும் மனித இயல்புக்கு மேற்பட்ட ஞானத்திலும் இருந்த ஆர்வம் சிறிதும் சிந்தனையை விட்டகலா திருந்தது. அவற்றை யடைய அவர் மெபிஸ்டாபிலிசின் உதவி யைப் பெறச் சற்றும் பின்வாங்க வில்லை.

## VII

## அரண்மனை வாழ்வு

" நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு"

குறள் 74;9

பாஸ்டின் குணத்தை மாற்றி, அவரை முற்றிலும் கெடுத்து, இவ்வாறுகத் தனது பந்தயத்தில் வெற்றி பெற மெபிஸ்டாபிலிஸ் இதுகாறும் எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் அவமாகி விட்டதால், அவன் தனது சபதத்தை நிறைவேற்ற வேறு முறை களைக் கையாடலானுன். அதற்காக அவன் பாஸ்டை ஜெர்மானிய அரசரின் அவைக்கு வான் வழியாக அழைத்துச் சென்றுன். அச் சமயம் அந்நாடு பல வகையிலும் பொலி விழந்திருந்தது. அட்டூழியச் செலவினுலும் மற்றும் பல திறப்பட்ட கோளாறு களாலும் அந்நாடு சீர் குலையுந் தறுவாயி லிருந்தது. நல்ல அமைச்சு

இல்லாததால் அந் நாடு மிகவும் கேவலமான நிலையை யடைந்திருந்தது. என்ற போதிலும், அவ்வரண்மனையின் விழாக் காட்சிகள் மட்டும் குறைவின்றி நடந்தன.

அச்சமயத்தில் பாஸ்ட்டும், மெபிஸ்டாபிலிசும் அங்கு வந்து சேர்ந்தனர். பாஸ்ட்டை ஒரு சிறந்த மந்திரவாதி யெனவும், மெபிஸ்டாபிலிசை அவனது கூட்டாளி எனவும் அறிமுகப் படுத்திக் கொண்டனர். பின் நிகழ்ந்த வேஷக் கூத்தில், மெபிஸ்டாபிலிஸ் புளூட்டோ (Pluto) முதலிய கிரேக்க தேவர்களை யெல்லாம் தனது வித்தையினால் வரச் செய்தான். அங்குக் கூடியிருந்தவர்கள் இம் மாய வித்தைகளைக் கண்ணுற்றுக் கதிகலங்கியிருக்கும் பொழுது, ஒரு மாய நெருப்பையும் உண்டாக்கி, அவர்களை மேலும் கலங்க வைத்தான்.

மாந்திரிகத்தில் முழு நம்பிக்கை கொண்ட அவ் வேந்தனுக்குப் பாஸ்ட்டின் மீதும், மெபிஸ்டாபிலிஸ் மீதும் விருப்பம் உண்டாயது. அன்றியும் அந் நாட்டின் பொருளாதார நிலையைத் தனக்கு ஒரு சிறந்த வாய்ப்பாகக்கொண்டு, அதைச் சமாளிக்க அந் நாட்டிலேயே தான் ஒரு பெரிய புதையலைத் தேடித் தருவதாக வாக்களித்து, மெபிஸ்டாபிலிஸ் மேலும் அம் மன்னனின் பேராசையைத் தூண்டி விட்டான். அதைப் பற்றி அரசன் அவனை வற்புறுத்த, புதையலைத் தோண்டி யெடுக்க நேரும் தொல்லைக ளின்றி, அதற்குப் பதிலாகக் காகித நோட்டுகளை அச்சடிக்கும்படி ஆலோசனை கூறினான். உறுதியான பொருளாதார நிலை ஏற்பட வேண்டுமாயின், ஒரு நாட்டில் அச்சிடப்படும் நோட்டுகளின் மதிப்புக் கேற்றவாறு கிட்டத்தட்டத் தங்கமும், வெள்ளியும், கட்டியாகவும், நாணய மாகவு மிருக்க வேண்டும். ஆனால் மெபிஸ்டாபிலிஸ் இதற்கு, “இந்தப் பொன்னும் வெள்ளியும் அரசாங்கப் பொக்கிஷத்தி லிருந்தா லென்ன, இந் நாட்டுப் பூமியில் புதைந்திருந்தா லென்ன?” எனச் சாமர்த்தியமாகச் சமாதானம் கூறி அரசனை இணங்க

வைத்தான். அரண்மனையின் களியாட்டங்கள் முழுமுரமாய் நடந்து கொண்டிருக்கையில், அரசன் அந் நோட்டுகளில் கையெழுத்திட்டான். நோட்டுகள் வெளியேறின. அவை தேசமெங்கும் பறந்தன. அதன் பின்னரே அரசன் தனது அறிவீனத்தை உணர்ந்தான். அவன் அந் நோட்டுகளை மீண்டும் பெற முடியாது போயிற்று. ஆனாலும் தற்காலிகமாகத் தன் நாட்டில் நிலவிய செழுமையைக் கண்டு தன் மனதைத் தேற்றிக் கொண்டான். பாஸ்ட்டும், மெபிஸ்டாபிலிசும் அவனுக்கு ஆபத்தில் உதவிய அரிய நண்பரெனப் பாராட்டப் பட்டனர்.

## VIII

## ஆவி யுலகம்

"நீ என்னை எழும்பி வரப்பண்ணி என்னைக் கலைத்தது என்ன?"

I Sam. 28:15

மாந்திரீகத்தில் அளவற்ற நம்பிக்கை யுடைய அரசன், கிரேக்க தேசத்து அழகி ஹெலன் (Helen), பாரிஸ் (Paris) இவர்களின் ஆவிகளைக் கொண்டு வந்து காட்டும்படி பாஸ்ட்டைக் கேட்டுக் கொண்டான். நாளடைவில் அவ்வரச சபையின் ஆடம்பர வாழ்வில் விருப்ப மிழந்து, அதனால் மறுபடியும் மன நிம்மதி இழந்திருந்த பாஸ்ட் அதைச் செய்ய உடனே உடன்பட்டார். ஆனால் மெபிஸ்டாபிலிசுக்கு அது எரிச்சலைக் கொடுத்தது. அம் முயற்சியினால் தனது விருப்பத்திற்கு மாறான முடிவே விளையும் என்பது அவனுக்குத் தெரியும். அதாவது இதனால் பாஸ்ட்டின் 'அறிவு தாகம்' அதிகரிக்குமே யன்றிச் சிறிதும் குறையாது என்பதை நன்குணர்ந்தான். ஆதலால் அவன் அம்முயற்சியினால் ஏற்படக் கூடிய இடையூறுகளை எடுத்துக் கூறி பாஸ்ட்டை அவரது எண்ணத்தைத் தவிர்க்க வேண்டினான். அவ்வாறு அவர்

ஆவியுலகத்திலிருந்து ஹெலனின் ஆவியைக் கொண்டுவர வேண்டுமானால் 'தாய்மார்'* எனச் சொல்லப்பட்ட சில பயங்கரமான சக்திகளின் உதவி வேண்டியிருக்கும் என்பதாகக் கூறினான். ஆவியுலகத்தைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆவலாலும், எட்டாதவற்றையும் எட்ட வேண்டுமென்ற எண்ணத்தாலும், முன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, மெபிஸ்டாபிலிஸ் தமது வாழ்க்கை முழுதும் தமக்குச் சேவை செய்யக் கட்டுப்பட்டுள்ளதை நினைவுறுத்திக் கண்டிப்பாகத் தனக்கு உதவி செய்ய வேண்டுமென பாஸ்ட் மெபிஸ்டாபிலிசை வற்புறுத்தினார். அதன் பின் அவன் அவருக்கு ஒரு திறவுகோலைக்[2] கொடுத்தான். அதை அவர் வாங்கியவுடன் அது உருவத்தில் பெரிதாகிப் பளபளப் படைந்தது. தாய்மார் வசிக்குமிடத்திற்கு அத் திறவுகோல் வழிகாட்டுமெனத் தெரிவித்து பாஸ்ட்டை மெபிஸ்டாபிலிஸ் சூனியப் பிரதேசத்தின் வழியாய் இறங்கச் செய்தான். வழியில் பற்பல ஆவி யுருவங்கள் அவரைச் சூழ, பாஸ்ட் அவற்றைத் தமது கையிலுள்ள திறவுகோலினால் அண்டவிடாதபடி துரத்தினார். பின்னர் ஜோதிமயமான, ஒரு மூன்று கால்களால் தாங்கப்பட்ட, கபாலம் (Tripoid[3]) காணப் பட்டது. அதன் ஒளியில் பாஸ்ட் அந்தத் தாய்மாரைக் காண முடிந்தது. ஆனால் அவர்களெல்லாம் தத்தம்

---

* **Mothers :** இது என்ன என்று எக்கர்மேன் (**Eckermann**) கேட்டதற்கு கதே "புலாட்டார்க் கூறும் கிரேக்க தெய்வங்களைத்தான் குறிப்பிடுகிறேன்." எனச் சுருக்கமாக பதிலிறுத்ததாகத் தெரிகிறது.

கிரேக்க ஆசிரியர் புலாட்டார்க் (**Plutarch**) எழுதியுள்ளபடி, தாய்மார்கள் என்பது விசித்திரமான, பயங்கரச் சக்தி வாய்ந்த பெண் தெய்வங்களைக் குறிப்பிடுகிறது. இதைப்பற்றிப் புலாட்டார்க் கூறியுள்ள முழுவிவரத்தையும் படிக்கும்போது, நமது நாட்டில் வணங்கப்படும் "43 முக்கோண ஸ்ரீசக்கரத்தை" ஞாபகப்படுத்துகிறது.

நிற்க : மனிதனின் கட்டுக்கடங்காக் கற்பனாசக்தியைக் குறிப்பதாகச் சில உரையாசிரியர்களின் கருத்து.

2, Symbol of Intuition

3, Symbol of Wisdom

வேலையில் முனைந்திருந்ததால், அவர்கள் பாஸ்ட்டைக் கவனிக்க வில்லை. மெபிஸ்டாபிலிஸ் சொல்லியிருந்தபடியே, பாஸ்ட் மிக்க தைரியத்துடன் சென்று அந்தக் கபாலத்தைச் சாவியினால் தொட்டார். உடனே அது அவரைப் பின் தொடர்ந்து அரசனின் அரண்மனை மண்டபத்திற்கு வந்தது.

அந்த மண்டபமானது மங்கலாக விளக்கேற்றப் பட்டிருந்தது. அரசனும், அரச அவையினரும், மற்றும் குடிகளும் அம் மண்டபத்தில் குழுமி, ஹெலன், பாரிஸ் இவர்களின் ஆவிகளைப் பார்க்க மிகவும் ஆவலுடன் காத்திருந்தனர். மெபிஸ்டாபிலிசும், அரசாங்க நிமித்திகனும் பின்னணிக் கூற்று நிகழ்த்தினர். குறிக்கப்பட்ட நேரத்தில், அந்த ஆவிகளை விடுவிக்குமாறு பாஸ்ட் அத்தாய்மாரைத் தியானித்து அந்தக் கபாலத்தைத் தமது சாவியால் தொட்டார். உடனே நீராவியை யொத்த ஒரு மூடுபனி தோன்ற, அதன் மத்தியில் முறையே பாரிஸ், ஹெலன் இவர்களின் ஆவிகள் தோன்றின. அழகே உருவெடுத்து வந்தாற் போல் காட்சி யளித்த ஹெலனைக் கண்ணுற்ற பாஸ்ட் அவளது அழகில் மயங்கி, தமது காதலை

"ஆசைக் கடலின் அமுதடா......
பெண்மைதான் தெய்விகமாங் காட்சியடா!"

எனவும்

"பொன்னே, ஒளிர் மணியே, புத்தமுதே, இன்பமே
நீயே துணையெனக்கு, நீயே குல தெய்வம்,
.........விந்தை யழகுடையாய்
ஆடவனாய்த் தோன்றியதன் பயனை இன்று பெற்றேன்.
கண்டதுமே நின்மிசை நான் காதல் கொண்டேன்" *

எனவும் வாய்விட்டுக் கூறினர். மெபிஸ்டாபிலிஸ் கொடுத்த எச்

---

* பாரதியார். இவ்விடத்தில் கதே உபயோகித்திருக்கும் சொற்களுக்கு இவை அநேகமாகப் பொருத்தமாயிருக்கின்றன.

சரிக்கையையும் மறந்து, அவர் பாரிஸ் மீது பொருமை கொண்டு, ஹெலனைக் கட்டித் தழுவ முயன்ருர். பாரிஸையும் தமது கையிலுள்ள திறவு கோலினல் தொட்டார். இவை யெல்லாம் ஆவிகளின் இயற்கைக்கு மாருனதால், உடனே ஒரு பெரிய இடி போன்ற சப்த முண்டாகி, இரண்டு ஆவிகளும் மறைந்துவிட, பாஸ்ட் உணர்வற்று மண்ணில் சாய்ந்தார். கபாலமும் அத்துடன் மறைந்தது.

இவ்வாறு உணர்வற்று வீழ்ந்த பாஸ்ட்டின் உடலை மெபிஸ்டாபிலிஸ் முதன் முதலில் பாஸ்ட்டைச் சந்தித்த அறைக்கு வான் வழியாகத் தூக்கிச் சென்ருன்.

## IX

## ஹெலன்.

" இன்பம், இன்பம், இன்பம்
இன்பத்திற்கோ ரெல்லைகாணின்
துன்பம், துன்பம், துன்பம். "

—பாரதியார்.

பாஸ்ட்டை ஒரு புராதனக் கட்டிலின் மீது படுக்க வைத்துவிட்டு, மெபிஸ்டாபிலிஸ் அடுத்த அறையி லிருந்த வாக்னரிடம் (Wagner) சென்ருன். அச்சமயம் வாக்னர் ரசாயன முறையில், ஹோமன்குலஸ் (Homonculus)* என்னும் சித்திரக்

* Homonculus, பதினரும் நூற்ருண்டில் வாழ்ந்த பராசிலியஸ் (Paracelsus) 1493 — 1541) என்ற வைத்தியர், ரசாயன முறையில் குழந்தைகள் உற்பத்தி செய்யலாமென்று ஒரு நூல் எழுதினர். இதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் சில அறிஞர்களும் இவ்வாராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். கதே காலத்தவராகிய வாக்னர் (Professor Wagner) என்னும் பேராசிரியர் இந்த ஆராய்ச்சியில் முனைந்து சில முறைகளைத் தெரிவித்தார். இதைக் குறிப்பிட்டே இவ்விஷயத்தைப் புகுத்தியுள்ளார்.

ஹோமன்குலஸ் மனிதனின் தனி அறிவின் சக்தியெனக் கொள்வர் சில உரையாசிரியர்கள்; மற்றுஞ் சிலர் ஒப்பற்ற அழகை அடையத் தவிக்கும் பாஸ்டின் ஆன்மா எனக் கருதுகின்றனர்.

குள்ளனை உற்பத்தி செய்வதில் முனைந்திருந்தார். ஒளி ஊடுருவிச் செல்லும் தன்மையுடைய உடலுடன் கூடிய ஓர் ஆவி அது. அதை அவர் ஒரு கண்ணாடி ஜாடியில் அடைத்து வைத்திருந்தார். அதற்குச் சிறந்த நுண்ணறிவும் இருந்தது. மற்ற பூதங்களுக் கொத்த வல்லமையும் செயலாற்றும் திறமையும் உண்டு. அப் பேர்ப்பட்ட தன்மையுடையதால் அது பாஸ்ட்டின் நிலையை முற் றும் அறிய முடிந்தது. ஹெலனைப் பெறச் செய்த முயற்சியில் பாஸ்ட் தோல்வியே யடைந்த போதிலும், அந்த ஒப்பற்ற அழ கணங்கை எவ்வாறேனும் பெற வேண்டும் என்ற உறுதியில் அவர் மனம் சிறிதும் தளர்ச்சி யடையவில்லை. அதனால் அந்த ஹோமன்குலஸ், "நீ இங்கே சும்மா இருப்பதில் பிரயோசன மில்லை. ஹெலன், அவள் தாய் பெரிசிபோனி, இன்னும் பல ஆவி கள் எல்லாம் ஒருங்கே கூடவிருப்பதும், கிரேக்க தேசப் பழங்கால தெய்வங்களுக்கு இருப்பிடமாயுள்ளதுமான தெசலிக்கு (Thessaly) பாஸ்ட்டைக் கூட்டிச் சென்றால் நல்லது" என மெபிஸ்டாபிலி சுக்கு ஆலோசனை கூறிற்று. ஆனால் மெபிஸ்டாபிலிஸ் தனக்கு அவ்விடத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதென மாய்மாலமாகக் கூறிவிட்டான். ஹோமன்குலஸ் தானே பாஸ்ட்டை அங்கு அழைத்துச் செல்வதாகக் கூறிற்று. ஹோமன்குலஸ் வழிகாட் டிய இடத்திற்கு மெபிஸ்டாபிலிஸ் தனது சக்தியால் பாஸ்ட்டை விசும்பின் வழியாய்த் தூக்கிச் சென்றான். அப் பூமியில் கால்பட்ட மாத்திரத்தில் பாஸ்ட் விழித்தெழுந்து, ஹெலனின் ஞாபகத்தில், "அவள் எங்கே?" என வினவினர்.

பின்னர் ஹோமன்குலஸ் மறைந்து விடவே, பாஸ்ட் அங் குள்ள "ஸ்பிங்க்ஸ்" (Sphinx)* என்ற குறி சொல்லும் சிலை யிடம் சென்று ஹெலனின் இருப்பிடத்தைத் தெரிவிக்குமாறு

* Sphinx : பெண்ணின் தலையும், சிங்கத்தின் உடலும் கொண்ட இந்தச் சிலை எகிப்து நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற பிரமிட் கல்லறைகளின் பக்கமுள்ளது. கதே கவிதா உரிமையுடன் இச்சிலை தெசலியி லிருப்பதாகக் கூறுகிறர்.

வேண்டினர். அது அவரைச் சிரானைக் (Chiron) * கேட்குமாறு கூறிற்று. அவ்வாறே பாஸ்ட் சிரானை யடுத்து அவர் உதவியை நாடினர். சிரான் அவரைத் தமது முதுகின் மேல் தூக்கிச்சென்று ஒலிம்பஸ் (Olympus) மலையடிவாரத்தில் விட்டுச் சென்றார்.

அங்கே பாஸ்ட் ஹெலன் தாயாகிய பெரிசிபோனியைச் சந்தித்து, ஹெலனிடம் தனக்கிருக்கும் கட்டுக் கடங்காக் காதலைத் தெரிவித்துத் தான் அவளை யடைய அவளது சம்மதத்தைப் பெற்றார் என்று யூகிக்க வேண்டியிருக்கிறது.

நிற்க, மெபிஸ்டாபிலிசின் உதவியால், பாஸ்ட் ஸ்பார்ட்டா (Sparta) நாட்டுக் கருகில் வடதேசத்தினருக்கு ஒரு தலைவனாக, பெரிய அரண்மனை யொன்றில் குடியேறினர். மெபிஸ்டாபிலிஸ் 'போர்க்கியாஸ்' (Phorkyas) * என்ற அவலட்சணப் பெண்ணின் உருவில் ஹெலனின் பணிப் பெண்களில் பிரதானமானவளாக அமர்ந்தான். தன் கணவனை மெனேலேயசுக்கு (Menelaus) முன்னரே ஹெலன் ட்ராய் தேசத்திலிருந்து திரும்பி விட்டாள். மெனேலேயஸ் அவளை அக் கிரேக்கத் தெய்வங்களுக்குப் பலியிடத் தீர்மானித்துள்ளான் என மெபிஸ்டாபிலிஸ் ஹெலனுக்குக் கூறி, பாஸ்ட்டிடம் அடைக்கலம் புகுமாறு ஆலோசனை

---

* **Chiron** : கிரேக்க புராணத்தில் சிரான் என்பார் இடுப்பிற்கு மேல் மனித உருவமும், எனைய பாகங்கள் குதிரை உருவமு முள்ளவர் எனக் கூறப்பட்டிருக்கிறது. குரோனஸ் (Chronos) பைலிரா (Phylyra) இவர்களுக்குப் பிறந்தவர். கல்வி கேள்விகளில் சிறந்தவர். சங்கீதத்திலும் வைத்தியத்திலும் மகா பண்டிதர். இவரே கிரேக்க புராணப் புகழ் பெற்ற அச்சிலிஸ் (Achilles) ஹெர்குலிஸ் (Hercules) ஜேசன் (Jason) முதலியவர்களுக்கு ஆசிரியர்.

* **Phorkyas** போர்க்கியாஸ் : இருளுக்கும் (Darkness) பாதாளத்திற்கும் (Abyss) பிறந்த இரு சகோதரிகளில் ஒருத்தி. இவர்கள் அவலட்சணமும் குரூரத் தோற்றமும் உருவானவர்கள், இவர்க ளிருவருக்கும் பொதுவாக ஒரு கண்ணும் ஒரு பல்லும் மாத்திரம் இருப்பதாகவும், அவைகளைச் சமயோசிதம் போல் உபயோகித்துக் கொள்வார்க ளென்றும், சூரியன், சந்திரனில்லா இருள் பிரதேசமே இவர்கள் வாழு மிட மென்றும், கிரேக்கக் கதைகள் கூறுகின்றன.

மெபிஸ்டாபிலிஸ் இவ்வுருவம் கொண்டது கதையின் கருத்திற்குப் பொருத்தமே.

கூறினான். ஜெர்மானிய அரச அவையில் பலாத்காரத்தை உபயோகித்ததால் நிகழ்ந்தவற்றை நினைத்து, அவன் ஹெலனை சுயேச்சையாகப் பாஸ்ட்டிடம் செல்வதற்காக இவ்விதத் தந்திரத்தைக் கையாண்டான்.

ஹெலனையும், அவளது பணிப் பெண்களையும் மெபிஸ்டாபிலிஸ் மேகங்களின் மீது பாஸ்ட்டின் அரண்மனைக்குத் தூக்கிச் சென்றான். அங்கே, ஹெலனும் பாஸ்ட்டும் ஒருவர் மீதொருவர் காதல் கொள்ள, பாஸ்ட் தமது ஆசை நிறைவேற அவளை யடைந்தார்.*

பரம்பரையாக அழகின் சின்னமாகக் கருதப்பட்ட அற்புத அழகி யாகிய ஹெலனும், ஒப்புயர்வற்ற அழகைக் கண்டுபிடிக்க ஆர்வ முற்றிருந்த பாஸ்ட்டும் சில ஆண்டுகள் இன்பமுடன் இல்லறம் நடத்தினர். இவர்களின் காதற் சின்னமாக யூபோரியன் உதித்தான். இணையற்ற அழகுருவை அடைந்ததாலும், அவ்வாறான அழகைச் சிருஷ்டிக்கக் கூடிய வல்லமையைப் பெற்றதாலும், சில காலம் பாஸ்ட் மன நிம்மதி அடைந்தவராகக் காணப்பட்டார். இவ்விருவரது இணையற்ற காத லின்பத்தைக் கதே மிக அழகாகச் சித்திரித்துள்ளார்.

---

* ஹெலன் : இந்நாடகத்தின் இரண்டாவது பாகத்தில் புகுத்தப்பட்டிருக்கும் ஹெலன் கதை ஒரு சிறந்த ஒட்டுவமை (Allegory). இதன்மூலம் கதே சில நுட்பமான உண்மைகளை விளக்கியுள்ளார்.

பேரழகி ஹெலன் பண்டைக் கிரேக்கக் கலை, இலக்கியம், உயர்ந்த சிந்தனை இவைகளின் சின்னமாக விளங்குகிறாள். இவைகளைக் கண்டறிய முடியாது திகைத்துக் கொண்டிருக்கும் மத்திய கால ஐரோப்பாவிற்குப் பாஸ்டைக் கவி ஒப்பிடுகிறார்.

அரச அவையில் கற்பனையில் கண்ட ஹெலனின் ஆவியைப் பாஸ்ட் உடனடியாக அடைய முயற்சித்த போது, குழப்பமும், மயக்கமும் ஏற்பட்டன; ஆதலின் வெறும் கற்பனையோடு மட்டு மல்லாமல், பொறுமையான ஆராய்ச்சியின் வாயிலாகவும் பூர்விகக் கலைஞானத்தை அடைய முற்பட வேண்டு மென்பது கதேயின் கருத்து.

பாஸ்ட், ஹெலன் இவர்களின் ஐக்கியம் ஐரோப்பாவில் அக் காலத்தில் ஏற்பட்ட புதுமலர்ச்சியைக் (Renaissance) குறிக்கும்.

ஹெலன் :— " காதலரிருவர் களிப்புடன் வாழ்ந்து
பூதலமதனில் பொலிவுடன் திகழ்வர்;
காதல்கட்டுண்டு காண்பர் மெய்யின்பம்
ஆயிடின் இருவர் மூவர்கள் எனவே. "

பாஸ்ட் :— " தேடிய தனைத்தும் சேர்ந்ததே கூடி
நாடினே னுனைநான், நீஎனதானாய்
ஈடிலாக் காதல் இணைத்ததே நம்மை
நீடியே வாழ, துறப்போம் மற்றெவையும். "

யூபோரியன்* அழகிய ஓர் இளங் காளையாக வளர்ந்தான். ஆனால் அவனுடன் மூர்க்கத் தனமும், பிடிவாதமும் கூடவே வளர்ந்து வந்தன. ஒருநாள் ஹெலனும் பாஸ்ட்டும் தங்கள் அரண்மனைக் கடுத்தாற் போலிருந்த மலைச்சாரலில் உள்ள தோட்டத்தி லிருக்கும்போது, யூபோரியன் வழக்கம் போல் குன்றுகளின் மீது ஓடியும், பந்துபோல் குதித்தும், தன் தாயின் பணிப்பெண்களைத் துன்புறுத்தியும், அச்ச மென்பதே சிறிது மின்றி விளையாடிக் கொண்டிருந்தான்.

---

* யூபோரியன் : (Euphorion) ஐரோப்பாவில் ஏற்பட்ட புதுமலர்ச்சியின் பலன் அக்காலத்தி லியற்றப்பட்ட செய்யுட்களில் தெரியவருகிறது. உண்மைச் செய்யுள் காலத்தையும், இடத்தையும், கட்டுப்பாட்டையும் கடந்த ஒரு தெய்விகச் சக்தி வாய்ந்தது. இதைக் குறித்தே ஹெலனுக்கும் பாஸ்ட்டுக்கும் யூபோரியன் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

பின் பாகத்தில், யூபோரியன் ஆங்கிலக் கவி (Lord Byron) பைரன் பிரபுவைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. இவர் மீது கதேக்கு ஒரு தனி அன்பு.

பைரன் தமது 36 - வது வயதில் கிரேக்க சுதந்தரத்தைப் பாதுகாக்கப் போர் செய்து மிசலோங்கி (Missolonghi) என்னுமிடத்தில், 1824 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் நாள் உயிரை யிழந்தார். இவரது பேரவாவையும், அஞ்சா நெஞ்சத்தையும், சுதந்தர உணர்ச்சியையும் கதே யூபோரின் மறைவதற்கு முன்னிருந்த அவனது மனவெழுச்சிகளின் வாயிலாய் அழகாகச் சித்திரித்துள்ளார்.

" அந்த நூற்றாண்டில் பழங்கால இலக்கியத்துடன் மத்தியகால கற்பிதங்களை இணைத்துக் கவர்ச்சியுடன் சித்திரிக்கக்கூடிய சிறந்த கவி பைரன் தான் " என்று கதே கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டில் அவனிடம் அகப்பட்டுக் கொண்ட பணிப் பெண் ஒருத்தி திடீரென்று வானில் மறைய, யூபேசரியன் அவளைப் பின்பற்றிப் பிடிக்கத் தீர்மானித்தான். உடனடியாக அவனது மனப்பான்மையும் மாறியது. போருக்குச் சென்று வீரச் செயல்களைப் புரியத் துணிந்தான். அதே சமயத்தில் அவனுடலில் செட்டைகள் முளைத்தன. பெற்றோரும், மற்றும் அங்கிருந்த பணிப் பெண்களும் தடுப்பதை அவன் கவனியாது, ஜோதிமயமான வானலோகத்திற்குத் துணிச்சலுடன் பறந்து சென்றான். சிறிது நேரத்திற் கெல்லாம் அவனது உயிரற்ற உடல், அவன் பெற்றோர்களின் காலடியில் வீழ்ந்து, மறைந்தும் விட்டது. அவனது உடையும் புல்லாங்குழலுமே மிஞ்சின.

“நமது இன்ப வாழ்வைச் சரியாக அநுபவிப்பதற்கு முன்னரே தாங்க முடியாத துயரம் வந்ததே!” எனக் கூறி பாஸ்ட்டும் ஹெலனும் மிகுந்த துயருற்றனர். விதியின் விளையாட்டால் ஹெலனும் அன்றிரவே பாஸ்ட்டைத் தனியே விடுத்துத் தன் மகனிடம் மறைந்து சென்றாள். அவள் செல்லுகையில், அவரைக் கடைசி முறையாக அன்புடன் தழுவி, “அழகும் இன்பமும் ஒருகாலும் நீடித்து இணைக்கப்பட முடியா என்னும் உண்மை என் விஷயத்திலே பலித்துவிட்டது. எனது ஜீவியத்தின் திரை கிழிந்தது. அத்துடன் எனது காதலும் முடிவுற்றது. இவையிரண்டினையும் நினைத்து, நான் துக்கத்துடன் தங்களிடத்தில் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்” எனக் கூறி, தன் உடையையும், மேலங்கியையும் அவரது கையில் விட்டு மறைந்தாள். சிறிது நேரத்தில் அவையும் மேகமாக மாறி பாஸ்ட்டைச் சூழ்ந்து கொண்டு, பின்னர் அவரை விசும்பின் வழியாகத் தூக்கிச் சென்று மலைகளின்மீது கொண்டுபோய் விட்டன.

# X

## போர்

" களவின் மேலல்ல; குருதியின்
வாளின் மீதே கட்டப்படுவது நாடு, "

— சுவின்பர்ன்.

மேகங்களா லாகிய தேரின் மீதேறிப் பாஸ்ட் நீர்ப்பரப்புகளை யும், நிலப்பரப்புகளையும் தாண்டி ஜெர்மானிய தேசத்திற்கு வந்து கொண்டிருந்தார். அச்சமயம் கடலின் அலையால் மோதப்பட்டு அதன் வெள்ளத்தால் மூடப்பட்ட ஒரு பெரிய சமவெளியைக் கண்ணுற்றுத் தாமதித்துச் சென்றார். இவ்வாறாக அக்கடலின் 'அட்டூழியத்தால்' பாழாக்கப்பட்ட நிலம் முழுவதும் மறுபடியும் வளமாக்கப்பட்டால், அது மனிதனுக்கு எவ்வளவு பய னளிக்கும் என்பதைக் கண்டறிந்தார். எனவே, பஞ்ச பூதங்களி லொன்றாகிய தண்ணீரா லாகிய கடலுடன் போராடி, வெற்றிபெற்று, அதன் மூலம் மனிதனுக்கு அதை உபயோகப்படுத்த வேண்டும் என்ற புதிய தோர் எண்ணம் அவருக்கு உதித்தது.

உண்மை யழகை அநுபவித்ததன்மூலம் அவரது கற்பனை சக்தி நுட்ப மாயிற்று. அவரது குறிக்கோள்கள் தன்னல மற்றவை யாயின. இவ்வாறாகப் புத்துணர்ச்சி பெற்று, முன்னை விடப் பரந்த அருளும், ஆழ்ந்த அறிவும் பெற்றவராய், செயற்கரிய காரியத்தைச் சாதிக்க வேண்டு மென்ற எண்ணத்துடன் அவர் ஜெர்மானிய தேசத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் முதல் முதலில் மெபிஸ்டாபிலிசைச் சந்தித்தார். மனித சமுதாயத்திற்கு ஒரு நன்மையைச் செய்து முடிக்க வேண்டு மென்ற தமது விருப் பத்தைப் பாஸ்ட் மெபிஸ்டாபிலிசுக்கு எடுத்துக் கூறினார். அவன் அதற்காக, ஒரு நாட்டின் அரசுரிமை, வல்லமை, புகழ், இன்பாது

பவம், சந்திர மண்டல யாத்திரை முதலியவற்றில் ஒன்றைத் தெரிந்து கொள்ளலா மெனத் தன் அபிப்பிராயத்தைக் கூறினன்.

" இந் நில வுலகமே இன்னும் உயர்ந்த சேவை புரிய இட மளிக்கும். அச்சேவையினல் ஏற்படும் பெருமை பெரிதல்ல. அக்காரியத்தைச் சாதிப்பதே முக்கியம். 'ஒளியொருவற் குள்ள வெறுக்கை " எனப் பதிலிறுத்தார்.

வீண் ஆடம்பரங்களிலும், களியாட்டங்களிலும் ஏற்பட்ட தனவிரயத்தாலும், மெபிஸ்டாபிலிசின் தூண்டுதல் பேரில் வெளியிட்ட காகித நோட்டுகளினுலும், சுருங்கச் சொல்லின், மதியீன அரசாட்சியினுலும், ஜெர்மானிய தேசம் மறுபடியும் சீர்கெட்ட நிலையி லிருந்தது. அதன் விளைவாக உள்நாட்டுப் போர் தலை தூக்கியது. பாஸ்ட்டுக்கும், மெபிஸ்டாபிலிசுக்கும் அறிமுகமா யிருந்த ஜெர்மானிய நாட்டு அரசன், தன் அரசாங்கத்தைக் கைப் பற்ற எண்ணிய பகைவன் முன்னரும், அவனது படையின் முன் னும் தோல்வியுற்றுப் பின் வாங்கிக் கொண்டிருந்தான். பாஸ்ட்டும் மெபிஸ்டாபிலிசும் அவ் வரசனுக்கு உதவி செய்ய முன் வந்தனர். மெபிஸ்டாபிலிஸ் தனது சக்தியால் 'பராக்கிரமசாலிகள் மூவரையும்' வரவழைத்தான். அவர்களால் எதிரியின் படை சிதறடிக்கப்பட்டது. அரசன் மீண்டும் சிம்மாசன மேறினன்.

இவ்வாறு முற்றுப் பெற்ற போரும், அதனு லேற்படக் கூடிய பெருமையும் பாஸ்ட்டைச் சோதனைக்குள் ஆழ்த்திவிடு மென மெபிஸ்டாபிலிஸ் கருதினன். ஆனல் இக்கருத்திலும் அவன் தோல்வியே யடைந்தான். பழைய நண்ப ரொருவருக்கு உதவி செய்தோ மென்ற மனத்திருப்தி தான் பாஸ்ட்டுக்கு உண்டாகி யிருந்தது. சேவையில் புத்துணர்ச்சி பெற்ற பாஸ்ட் யுத்தத்தை வெறுத்து, " மீண்டுமோர் போரா? நான் அதை ஒருக்காலும் விரும்பேன் " என்ருர். ஆனல் சமரில் உதவி புரிந்ததற்குக் கைம் மாருக, பாஸ்ட் மன்னனிடமிருந்து முக்கியமான ஒரு பரந்த கடற் கரையைத் தமக்கு உரிமையாகப் பெற்ருர்.

# XI

## சேவை

**"என்னை அனுப்பினவன் எண்ணம் நிறைவேற
உன்னிப் பணிசெய்தல் ஊண்."**

—திரு. வி. க.

இயற்கையைத் தம் வயப்படுத்தி மனிதனுக்கு அதை உபயோகப்படுத்த பாஸ்ட் உடனே தமது திட்டத்தில் முனைந்தார். முணு முணுப்பில்லாது அவரது ஆணைக்கு மெபிஸ்டாபிலிஸ் கீழ்ப் படிய வேண்டு மென்ற நிபந்தனையின் படி, பாஸ்ட்டுக்கு மெபிஸ்டாபிலிசின் உதவியால் சிறந்த வேலையாட்கள் கிடைத்தனர். இவர்களது உதவியாலும், தம்முடைய மதி நுட்பத்தாலும், அவர் பெரிய அணைகளைக் கட்டிக் கடல் நீரைப் பின் வாங்கச் செய்து, சதுப்பு நிலத்தைக் குடியிருப்புக்கும் விவசாயத்திற்கும் ஏற்ற நிலமாக மாற்றினர். அன்றியும் அவர் பல துறைமுகங்கள், வாய்க்கால்கள் முதலியவற்றையும் அமைத்தார். இவ்வாருகத் தமது முயற்சியால் நிலவளமும் நீர் வளமும் பெறச் செய்த நாட்டில் சுறுசுறுப்பும், முயற்சியும், குன்ருத் திரமு முடைய மக்களைக் குடியேறச் செய்தார்.

பல வருடங்களாக இவ்வேலை நடைபெற்றது. பாஸ்ட் நூறு வய தடைந்தார். அவர் உண்டாக்கிய அந்நாட்டில், திருப்தியும், சந்தோஷமும் பொருந்திய சுதந்தர மக்கள் சூழ, அவர் ஒரு சிற்றரசன் போல் வாழ்ந்து வந்தார். கடற்கொள்ளையில் திரட்டிய திரண்ட பொருளுடன் மெபிஸ்டாபிலிஸ் அங்கு வந்து சேர்ந்தான். பாஸ்ட்டின் மனப்பான்மை முற்றிலும் மாறிய பின்னரும், செல்வத்தாலும், மற்றும் சகலவித வலிமைகளாலும் பாஸ்ட்டைத் தனது மாயவலையில் சிக்க வைக்கலா மென்று மெபிஸ்டாபிலிஸ் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். பாஸ்ட்டிற்கு அவனது

இணக்கம் சிறிதும் விருப்ப மில்லை. என்ற போதிலும் இருவரும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி பாஸ்ட் மெபிஸ்டாபிலிசைத் தம் விருப்பப்படி சேவை செய்ய வைத்துக் கொண்டார்.

## XII

## கவலை

"உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்"
—(Hebrews 13: 5)

"நீங்கள் கவலையற்றவர்களா யிருக்க விரும்புகிறேன்"
—(I Corin 7: 32)

அவரது எண்ணம் கிட்டத்தட்ட எல்லாம் நிறைவேறியது. அவர் தமது ஊழியத்தை மட்டும் நிறுத்தவில்லை. ஊழிக்காரர் இன்னும் புதிய சதுப்பு நிலத்தைத் தூர்ப்பதிலும், கால்வாய்கள் கட்டுவதிலும் முனைந்திருந்தனர். ஆனல் அவருக்கு ஒரு சிறிய மனக் குறை இருந்து வந்தது. அவர் அவ்விடத்திற்கு வந்து அச் சமவெளியைச் செவ்வை பண்ணும் முன்னரே, கடற்கரைக்குச் சற்று தூரத்திலும், அவரது அரண்மனைக்கு அண்மையிலும் சற்று உயர்ந்த மட்டத்தில் ஒரு எலுமிச்சந் தோப்பின் மத்தியில் அமைந்த சிறிய வீடும் கோயிலும் இருந்தன. அச் சிறிய வீட்டில் பாஷிஸ், பிலோமோன் (Baucis and Phileomon) என்ற வயது முதிர்ந்த தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். அதன் சுற்றுப் புறத்தைச் சீர்படுத்திக் கொண்டிருந்த பாஸ்ட்டிற்கு அவ்விடத்தை எவ்வாறேனும் தம்வச மாக்கிக்கொள்ள வேண்டு மென்ற ஆசை யிருந்தது.

ஆனல், அது நிறைவேறுவது கடினமாயிற்று. அச் சிறிய கோயிலின் மணி ஓசையை அவர் கேட்கும் போதெல்லாம், அது அவர் மனதைக் கலக்கியது. அம்மேட்டு நிலம் அவரது திட்டங்களை

நிறைவேற்றுவதற்கு ஓர் இடையூருகத் தோன்றியது. அது தமது ஆதிக்கத்திற்கே ஒரு பெருங் குறை யெனவும் நினைத்தார். ஆகவே அந் நிலம், வீடு இவைகளுக்குப் பதிலாக வேருெரு பெரிய நிலமும், வசதியான வீடும், இன்னும் அவர்கள் விரும்பிய மற்றெவையும் தருவதாகப் பாஸ்ட் அத் தம்பதிகளுக்குச் சொல்லி யனுப்பினர். ஆனல் தொடக்கத்திலிருந்து பாஸ்ட்டினிடம் ஒரு விதமான அதிருப்தியும், அவநம்பிக்கையும் கொண்டிருந்த அவர் கள் எக்காரணத்தைக் கொண்டும், மற்றெதற்காகவும், தங்கள் சிறிய குடிலையும், ஜபாலயத்தையும் கொடுக்க மறுத்துவிட்டனர்.

ஒரு நாள் மாலை (அதை அவரது வாழ்க்கையின் கடைசி மாலையாகவே கொள்ளலாம்) அப்பொழுதுதான் அந்த ஜபாலய மணி ஓசையைக் கேட்டு என்று மில்லாத மனக் கலக்கமும் ஆத்திரமும் அடைந்திருந்த பாஸ்ட், மெபிஸ்டாபிலிசிடம், "நீ அத் தம்பதிகளை வெளியேற்றி அவர்களுக்காக ஏற்பாடு செய் திருக்கும் வசதியான மற்றோர் இடத்தில் குடியேற்றுவிக்க வேண்டும். ஆனல் அவர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யக் கூடாது" என்று திட்டமாகக் கட்டளை யிட்டார்.

அன்றிரவு மெபிஸ்டாபிலிசும், அவனது 'மூன்று தடியர் களும்' அவ்வீட்டிற்குச் சென்று கதவைத தட்டினர்கள். வயோதிக தம்பதிகள் கலவரப்பட்டுக் கதவைத் திறக்காமல், ஒளிந்து கொண்டார்கள். மெபிஸ்டாபிலிசும் அவனது ஆட்களும் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று அவர்களை இழுத்தனர். அவர்கள் மிகுந்த பயத்தில் இறந்துவிட்டார்கள். அங்கு விருந்தாக வந்திருந்த வழிப்போக்கன் மெபிஸ்டாபிலிசை யும் அவனது ஆட்களையும் எதிர்க்க,, அவனும் ஒரு விநாடியில் அடித்து வீழ்த்தப்பட்டான். இந்தக் கலவரத்தில் கணப்பெரியும் இடத்திலிருந்து நெருப்புப் பொறி சிதறிக் கூரையில் தீப்பிடித்துக்

கொள்ள, அது பரவியதால் மரத்தினால் கட்டப்பட்டிருந்த அவ் வீடும், ஜபாலயமும் எரிந்து கொண்டிருந்தன.

நடு இரவில் கவலையுடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும் தமது அரண்மனையின் மேல்மாடியில் உலாவிக் கொண்டிருந்த பாஸ்ட், திடீரென்று எலுமிச்சந் தோட்டத்தில் கொழுந்துவிட்டு எரியும் தீயைப் பார்த்துத் திகிலடைந்தார். விவரத்தைச் சிறிது நேரத்திற் கெல்லாம் அவ்விடம் வந்த மெபிஸ்டாபிலிஸ் சொல்லக் கேட்டு, அவர் வெகு வேதனை யடைந்தார். "நான் கண்டிப்பாகச் சொன்னதை நீ மதிக்கவில்லை. அத் தம்பதிகளுக்காக ஆயத்தம் செய்யப் பட்டிருக்கும் வேறிடத்தில் குடியேற்றுவிக்கச் சொன்னேனே ஒழிய அவர்களை அழிக்கச் சொல்லவில்லை. இந்த அடாத செயலின் பாவம் பழியெல்லாம் உன்னையே சாரும். உன் தொடர்பே எனக்கு இனி வேண்டாம். என்னை விட்டு எங்காவது தொலைந்து போ!" என்ற சாப மொழிகளுடன் சினந்து கூறினார். மெபிஸ்டாபிலிசும் அவ்விடம் விட்டகன்றான்.

## XIII

## மனம் திரும்புதல்

"மனித வாழ்க்கை மனந்திரும்புதலால் பூரணமடைகிறது."

—கார்லைல்

"சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்."

என்ற பொய்யாமொழிக்கு இலக்காக விளங்கியவர் பாஸ்ட். எக்காலத்தும் பிறர் துன்புறப் பார்க்கவும் சகியாதவர். தம் இச்சை நிறைவேற மெபிஸ்டாபிலிசிடம் அன்று மாலை அந்த வயோதிக தம்பதிகளை அப்புறப்படுத்த ஆத்திரமாகக் கட்டளையிட்டது பற்றி

வருந்தினர். அவர்களுக்கு ஏற்பட்ட அநியாயச் சாவுக்குத் தாமே முதற் காரண மென்று உணர்ந்தார்.

" தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணு வார்"

அன்றோ !

இந்த உணர்ச்சி வேகத்தில் தமது வாழ்க்கையில் செய்த பல தீங்கான காரியங்களுக்காகவும், மாந்திரீகத்தில் தலையிட்டுக் கொண்டதற்காவும், பாஸ்ட் மிகவும் மனம் வருந்தினர். இவ்வித மான பச்சாத்தாப மல்லவோ ஒரு ஆன்மா கடவுளிடம் திரும்பு வதற்கு முதல் சாதன மாகும் ! ஆகிலும் மாந்திரீகத்துக் குள்ள விளக்கொணுச் சக்தியை அவர் நினைக்கும் பொழுது, அவருக்கு ஒருவித அச்சம் உண்டாயிற்று. தேவை, நோய், குற்றம், கவலை இந் நான்கும் பெண்கள் உருவமாக வந்து அவரைச் சூழ்ந்து கொண்டன. அவரது இவ்வித சித்தந் தெளிந்த நிலையில் முதல் மூன்றும் அவரிடம் அணுக முடியவில்லை. ஆனல் கவலை மட்டும் அவரிடம் வந்து அவர் மீது ஊதிற்று. உடனே அவர் பார்வையை இழந்தார்.

அவர் தமது ஊனக் கண்களை யிழந்த போதிலும், அவரது ஞானக் கண் இன்னும் தெளிவாகத் திறந்தது. பார்வை யிழந்தது அவரது ஆன்மாவின் ரட்சிப்புக்கு ஓர் இடையூருக விளங்கவில்லை. அவரது வாழ்க்கையின் முடிவில்தான் அவர், " என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பொன் மொழியின் உண்மையை யறிந்தார். அன்றியும் இவ்விதமான பணி செய்ய, மனிதன் தன் இயற்கைக்கு மீறிய ஆற்றலை யடைய முயல்வது இடையூருகும் என உணர்ந்தார். மனித சக்திக்கும் ஒரு வரம் புண் டென்பதைக் கண்டு கொண்டார். முதல் முதல் அவரது மன அமைதியைக் குலைத்தது யாவற்றையும் அறிய வேண்டு மென்ற அவா. இதுவே

அவரது கவலைக்கு மூல காரணம் என்பதையும் உணர்ந்தார். துன்பத்துட் துன்பமாகிய இக் கவலையை* மனிதத் தன்மையுட னேயே விலக்க முயன்றார்.

## XIV

## மன அமைதி

"மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது."

—ஜான் 2:8

ஞானிக ளெல்லாரையும் போலவே, பாஸ்ட்டும் தமது ஆயுள் முடிவை முன்னறிந்தார். ஆகவே தாம் தொடங்கிய வேலையைச் சீக்கிரமாக முடித்துவிட வேண்டு மென்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. பார்வை யிழந்த பாஸ்ட் சிறிது தடுமாற்றத்துடன் மெதுவாக மேல்மாடியிலிருந்து இறங்கி, அரண்மனை முன்னிருந்த பரந்த வெளிக்கு வந்து, தமது கண்காணியைக் கூப்பிட்டார். மெபிஸ்டாபிலிஸ் பாஸ்ட்டின் நிலையை அறிந்து, கண்காணியின் குரலில் பதில் கொடுத்தான். அவர் அவனைக் கண்காணி யெனவே கருதி, வேலை யாட்களை எழுப்பி வேலையைத் துரிதமாகச் செய்யச் சொன்னார். அவர்களைப் புகழ்ந்தும், பரிசு கொடுப்பதாக வாக் களித்தும், வேலையில் ஈடுபடச் செய்யுமாறு கூறினார். அவரது இறுதிக் காலம் நெருங்கியதை ஒருவாறு உணர்ந்து கொண்ட மெபிஸ்டாபிலிஸ் தனது ஆட்களைக் கொண்டு சவக் குழியொன்று வெட்டச் செய்தான். இதைத் தெரிந்து கொள்ளாத பாஸ்ட், மண் வெட்டும் சத்தத்தைக் கேட்டுத் தன் கட்டளைக் கிணங்க, தன் ஊழியக்காரரே வேலை செய்கின்றார்க ளென நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்.

---

* "Care at the bottom of the heart is lurking, Her secret pangs in silence working."

—(Taylor. Page 24. Part I. Sc. I)

திடீரென அவர் சிந்தனையி லாழ்ந்தார். தமது முயற்சியால் நிறுவிய நாடும், அதிலே யுள்ள ஆர்வமும் ஆற்றலும் சந்தோஷமும் பெற்ற மக்களும் வருங்காலத்தில் அநுபவிக்கும் நல் வாழ்வைப் பற்றிக் கற்பனை செய்தார். இவ்வாறாக உலகத் தன்மை நன்மைகளினின்றும் எப்பொழுதும் மேனோக்கிக் கொண்டிருக்கும் இயல்பு வாய்ந்த அவரது மனம், தமது மரணத்திற்குப் பின் நடக்கக் கூடியதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. பிறருக்குத் தாம் புரிந்த சேவையின் மகத்துவத்தையும், அதனால் மக்கட் குண்டாய நன்மையையும் அவர் நன் குணர்ந்தார்.

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும்."

எனக் கூறக் கூடிய உன்னத நிலையை யடைந்தார். "இந்தச் சிறியரில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்." என்ற, *அன்பினால் உலகை அமைதியில் நிறுத்த அவதரித்தருளிய இயேசு ஐயன் திருவாய் மொழியின் கருத்தை யறிந்தார். இவ்வாறான எண்ணங்கள் அவரது அலைபட்ட மனத்திற்கு அமைதி யளித்தன; அவரைப் 'பூரண இன்பவெளிக்குள்ளே' துன்ன வைத்தன. பிறர் இன்புறக் கண்டு இன்ப முறச் செய்த அத் தன்னல மற்ற சேவையால் அவருக்கு இப்பேர்ப்பட்ட நீங்காச் சமாதானமும், நிலை பெற்ற நிம்மதியும், நிறைந்த இன்பமும் உண்டாயின. அதனால் அவர், "இந்த இன்ப நிலை இன்னும் நீடிக்காதா என்று என் மனம் ஏங்குகிறது. பின் வரும் பெரும் பேற்றை நான் முன்னறிந்து இப்பேர்ப்பட்ட பேரின்ப நிலையை யடைந்துள்ளேன்" எனக் கூறினார். இவ் வார்த்தைகளுடன் அவர் சோர்ந்து வீழ்ந்தார்.

---

* Inasmuch as ye have done it unto one of the least of these my brethren, ye have done it unto me: —St. Matthew 25/40 :

# மெலிஸ்டாபிலிசின் தோல்விப் பிரமை



தான் என்ற ஆணவமே உருவென வந்து தன்னலத்தையே அணிகலமாகக் கொண்ட மெபிஸ்டாபிலிசுக்கு, பாஸ்ட்டின் வார்த்தைகளின் கருத்தை ஒரு சிறிதும் அறிந்து கொள்ள முடிய வில்லை. அதனுல் அவன் அப்பேரின்ப நிலையை, "உப்புச் சப்பற்ற சூனிய நிலை" எனக் கூறினன். பின் அவன் தனது ஒப்பந்தத்தின்படி பாஸ்ட்டின் ஆன்மாவைக் கைப்பற்ற முயன்ருன். அவன் கூவி யழைக்கப் பூமி வெடித்து அதன் வழியாக அவனைச் சேர்ந்த பேய்க் கணங்கள் வந்து சேர்ந்தன.

முடிவில் தன்னையும் மறந்து, தன்னலம் விடுத்து மக்கள் பணியி லீடுபட்டுச் சேவை ஒன்றே போதும் என்ற திருப்தியுடன் இறக்கும் நிலையிலுள்ள பாஸ்ட்டின் ஆன்மாவை அழைத்துச் செல்ல தேவ தூதர்களும் அவ்விடம் வானில் வந்து சேர்ந்தார்கள்.

மெபிஸ்டாபிலிசும், மற்றப் பேய்களும் பாஸ்ட்டைச் சுற்றி நின்றன. அவரது ஆன்மா உடலை விட்டுப் பிரியும் சமயம் பார்த்து அதை இழுத்துச் செல்லக் காத்திருந்தன. ஆனல் தேவ தூதர்களோ 'தெய்வ அன்பின்' சின்னமான வானலோக ரோஜா மலர்களைச் சொரிந்தனர். அவை அப் பேய்களைத் தழ லெனச் சுட்டன. பேய்கள் அதைக் கண்டு பயந் தோடின. மெபிஸ்டாபிலிஸ் ஒன்றும் செய்யத் தோன்ருது விழித்தான். அத் தேவ தூதர்கள் பாஸ்ட்டின் ஆன்மாவைத் தக்க தருணத்தில் தமதாக்கி, அதை மேலும் மேலும் வளர்ந்தோங்கச் செய்வதும், வெறுப்பு, விருப்பு, கவலை, பிணி, மூப்பு, சாக்காடு இல்லாதது மான அப்பேரின்ப உலகிற்குக் கொண்டு சென்றனர்.

மெபிஸ்டாபிலிஸ் தன்னுடன் பாஸ்ட்டின் ஆன்மாவை அழி நரகத்திற்கு அழைத்துச் செல்ல எடுத்த முயற்சிக ளெல்லாம் வீண யின. இயற்கையிலேயே தெய்வானுக்கிரகம் பெற்ற பாஸ்ட் டின் அடிக்கடி தமது வாழ்க்கைப் பாதையில் தவறியபோதிலும்

மெபிஸ்டாபிலிசின் வலைக்குள் வீழாது, அவனைத் தம் மேலான எண்ணங்களை நிறைவேற்றக்கூடிய ஒரு கருவியாகத் தன் பின்னேயே இழுத்துச் சென்றார். அவரது உலக வாழ்வுடன் அவர் மீது மெபிஸ்டாபிலிசுக்கு இருந்த ஆதிக்கமும் முடிவுற்றது. ஆகவே இறுதியில் மெபிஸ்டாபிலிஸ் ஆண்டவரின் திருச்சந்நிதியில் செய்து கொண்ட பந்தயத்தில் தோல்வியே அடைந்தான்.

பாஸ்ட்டின் அழிவற்ற ஆன்மா ஆண்டவனின் அருள் சமூகத்திற்கு அழைத்துச் செல்லப் படுகையில் அமரர்கள் ஆசீர்வாத மழை பெய்தனர். "மீள்வதற் கரிதான மிகப் பெருஞ் சோதனைகளினின்றும் மீட்கப் பெற்ற மேன்மை பொருந்திய ஆன்மா" எனச் சம்மனசுகள் பூமாரி சொரிந்தன. அவர்களது மத்தியில் 'வெள்ளங்கி பூண்டு மாட்சியாக நிற்கும்' மார்கரெட், "அன்பரே, இனி உமக்கு யாதொரு அலைவும் சோர்வும் இல்லை. என்னிடமே திரும்பி வருக!" என முகமலர்ந்து, இன்னிசை மொழிகள் கூறி, அவரை வரவேற்றாள்.

"அவர் ஜெயங் கொண்டோராய்,
இனிச் சோதிக்கப் படாராய்,
தீமை நீங்கித் தூயோராய்"

அப்பேரின்ப வீட்டை அடைந்தார்.

இவ்வாறாக மேலுலகத்தில் தொடங்கிய கதை மேலுலகத்திலேயே முடிவுற்றது.

# முடிவுரை

கதே பாஸ்ட்டுக் கதையைத் தம் கருத்திற் கேற்பப் பெரும் பாலும் மாற்றி யமைத்தார். முன்னுள்ள கட்டுக் கதைகளின் விரும் பப்படக்கூடாத சில பயங்கர நிகழ்ச்சிகளுக்கு அவர் முக்கியத் துவம் கொடுக்கவில்லை. அவர் எந்நோக்கத்துடன் தமது நாடகத் தைத் தொடங்கி யிருப்பினும், அந்நாடகத்தின் முதல் பாகம் முற் றுப் பெறு முன்னரே, அவரது நோக்கம் மற்ற பாஸ்ட் கதை களின் நோக்கத்திற்கு மாறுனதாயிற்று. தமது நாடகத்தை ஆத் மீக, தத்துவக் கொள்கைகள் அடங்கியதாகச் செய்து முடித்தார்.

மனிதன் தன் சுய அறிவால் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கிய காலத்து, அவனுக்குக் கடினமாகத் தோன் றிய சில சிக்கலான தத்துவங்களைப் பற்றி அவரது மனம், அவ ருடைய முப்பதாம் வயதிலிருந்தே அடிக்கடி சிந்தனை செய்யத் தொடங்கியது. "உலகத்தில் தீமை இருப்பதேன்? அதனது இயற் கைத் தன்மை என்ன? அதுவும் அழியாத் தன்மை வாய்ந்ததா? அது உலகத்தில் இன்றியமையாததா? மனிதனது ஆன்மாவானது தன் பாசக் கட்டினின்று விடுதலை பெற்றுச் சுவாதீனமாக விளங்கு வதற்காக ஏற்பட்ட ஒரு தோற்றமா?" இப்பேர்ப்பட்ட கேள்வி கள் அவர் அகத்தெழுந்து ஒரு பெரிய புயலை உண்டாக்கின. இவ் வாறுக அவர் மனதிலுண்டான போராட்டம் பல நாட்கள் நீடித் தது. இறுதியில் அவர் கண்டறிந்த உண்மைகளை அவர் தமது பாஸ்ட் நாடகத்தின் மூலம் வெளியிட்டனர்.

கதே தமது பாஸ்ட் நாடகத்தை 1769–70 இல் தொடங்கிய போதிலும், அது 1832–ஆம் ஆண்டில்தான் முடிவுற்றது. அவர் இலக்கிய சேவை புரிந்து வந்த அறுபத்திரண்டு வருஷகாலமும் அந் நாடகம் முற்றுப்பெறத் தேவையா யிருந்தது. ஆகவே, அந்நாட் களில் அவரது கொள்கைகளிலும், குணதிசயங்களிலும் ஏற்பட்ட மாறுதல்கள், அவரது நாடகத்தில் ஆடியி லேற்படும் பிம்பம்போல் தெளிவாகப் பிரதிபலிக்கப் பட்டுள்ளன. "உலகத்திலேயே அறி வாற்றல்களால் சிறந்து விளங்கிய அறிஞர்களில் ஒருவராகவும்

அவர் வாழ்ந்த நூற்றுண்டின் இணையிலா அறிவுச் சுடராகவும் விளங்கிய கதேயின் தீவிரக் கொள்கைகளை இந்நூல் பிரதிபலித்துக் காட்டுவது வியப்பல்ல." எனவும் "ஒரு நாட்டின் இலக்கியத்தை மறு மலர்ச்சி அடையச் செய்து, ஒரு கண்டத்தின் இலக்கியத்திற்குப் புத்துயிரளித்த ஒரு புலவர் பெருமானின் உன்னத சித்திரம்"[1] எனவும் இந்நூல் புகழப்பட்டுள்ளது. அக்காலத்து இலக்கிய ஓவியக் கலைகளை மிக்க வலிமையுடன் தாக்கித் தமது கருத்துக்களை மறைமுக மின்றி வெளிப்படையாக எடுத்துக் கூறும் டாக்டர் மாக்ஸ் நார்டன் என்பவர் கதேயின் பாஸ்ட்டைப் பற்றி "உலகத்தில் தலை சிறந்து விளங்கும் காவியங்களில் ஒன்று"[2] என்று கூறியிருக்கிறார்.

மற்றும் பாஸ்ட் நாடகம் அச்சிடப்பட்டது முதல் இன்று வரையில் உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள பேரறிஞர்களும், பேராசிரியர்களும் அதில் காணும் செய்யுட் புலமையையும், சித்துக்களின் சிறந்த பான்மையையும், பரந்த கொள்கைகளையும் வியந்து பாராட்டி யுள்ளார்கள். கதே உலக அறிஞர்களிலேயே மிகச் சிறந்தவரெனவும்,[3] பாஸ்ட் நாடகத்தை 'அபார அறிவின்' விளைவென்றும்,[4] இந்நூல் பலதடவை, ஒவ்வொரு வார்த்தையையும், படித்து, அறிந்து அநுபவிக்க வேண்டிய சிறந்த இலக்கியமென்றும்[5] புகழ்ந்துள்ளார்கள். இவ்வரிய நூலின் நுட்பத்தையும், திட்பத்தையும், மாண்பையும் விவரிக்கத் தம் மொழியின் சொல்லகராதி போதாதென ஒருவர் கூறியுள்ளார்.[6] இவ்வாறுன புகழுரைகளைத் தொகுத்தால் அதுவே ஒரு தனி நூலாகிவிடும்.

கதே தாமே எடுத்துரைத்திருப்பது போல் இந் நாடகமானது, நம்மை மேலுலகத்திலிருந்து, இப்பூலோகத்தின் வழியாய்க் கீழுலகத்திற்கு இழுத்துச் சென்று, பின் இப்பூலோகத்தின் வழியாய் மேலுலகத்திற்குத் தூக்கிச் செல்கிறது. "தெய்வ லோகத்தில் தொடங்கிய முகவுரையுடன், தேவதூதரின் கடைசிப் பல்லவி வரை இந்நாடகமானது, ஒழுங்காகத் திட்டமிடப்பட்டு, மூலக் கொள்கை

1 Prof. A. G. Latham 2 Dr Max Nordan (Degeneration)
3 Prof Santyana 4 Emerson 5 Carlyle
6 Nicholas Rocrich.

களினின்றும் சிறிதும் வழுவாது முடிக்கப் பெற்றுள்ளது. "நாடக முழுவதிலும், முக்கியமாக இரண்டாவது பாகத்தில் வரையப் பட்டுள்ள சித்துக்களிலும், உருவங்களிலும், கடவுளின் வெற்றி பெறும் தன்மையும், அவரது சர்வ ஞானமும், அளவு கடந்த அன்பும் தெளிவாகக் காட்டப் படுகின்றன.

மாறுபாடான கொள்கைகளும், போர் முழக்கங்களும் நிறைந்து விளங்கும் இந்த "அணு சக்தி" காலத்தில், நன்கா ராய்ந்து, ஆழ்ந்து அமையப் பெற்ற உறுதியான கொள்கை களுடன், கதே தன் "பாஸ்ட்டின்" மூலம் ஒரு சிறந்த அறிவுணர் தலை அருளுகின்றார். அதாவது, "நான் என்னும் ஆணவத்தை ஒருவன் விடுத்து, தனது சித்தம் இயற்கையின் இணையற்ற சட்டங்களுடன் முரண்படாதிருக்கச் செய்து, எல்லாவற்றிற்கும் மேலாகப் பிறர் மீதுள்ள அன்பினால், அவர்களுக்கென வாழவும், சிந்திக்கவும் பழகுத லவசியம். இப்பேர்ப்பட்ட 'தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும்' வாழ்வில் மாத்திரம் ஒருவன் தன் இயற்கை உணர்ச்சிகளைத் திருப்தி செய்து முடிவிலா மன அமைதியை யடைய முடியும்."

"நானென தன்மை நழுவியே எவ்வுயிர்க்கும்
தானென உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ"
"எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ"[1],

அந்நாளே கதேயின் உன்னதக் கொள்கைகள் உலகில் தாண்டவ மாடும் நந்நா ளாகும்.

1 தாயுமானவர்

## இந்நூலை எழுதுவதில் கையாளப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்புகள்


| | | |
|---|---|---|
| 1. Bayard Taylor: | PARTS I & II | *Modern Library* |
| 2. A. G. Latham: | Do. | *Everyman's Press* |
| 3. Louis Mac Neice: | PARTS I & II ABRIDGED B. B. C. EDITION | *Faber & Faber.* |
| 4. Jonathan Birch: | PART II ABRIDGED | |
| 5. G. M. Cookson: | PART I | *Collected works of Goethe Edited by Dr. Thomas Mann.* |
| 6. Philip Wyne: | Do. | *Penguins' Classics.* |
| 7. John Austen: | Do. | *World's Classics along with Marlowe's Faust.* |
| 8. Shelleg: | A PORTION OF PART I | *Collected works of Shelleg. Oxford University Press.* |
| 9. B. H. Vander Sressen: | PARTS I & II INTRODUCTION BY SIR ROBERT FALCOUER | *J. M. Vent & Sons, London.* |


## OTHER BOOKS CONSULTED


| | | |
|---|---|---|
| 1. Life of Goethe: | PROF. SEOME | *Men of Letters Series.* |

| | | |
|---|---|---|
| 2. Goethe: W. Story of Man: | Ludwig Lewishion | *F. Stauss & Co., N. York.* |
| 3. Goethe & World Literature: | Fritz Strich | |
| 4. Goethe & Tolstoi: | Dr. Thomas Mann | |
| 5. Goethe & Faust: | An Interpretation: Stewell Dickinson | *George Allen & Unwin & Co. Lond:* |
| 6. Goethe | Man & Poet | *By Benedetto Croce Translated from Italian by Miss Emily Anderson* |

# சங்கநூற் காட்சிகள்

ஆசிரியர் : **கி. வா. ஜகந்நாதன்**

சங்கநூல்கள் தமிழ் நாட்டின் அழிவில்லாத பொக்கிஷங்கள். அவற்றில் மிகச் சிறந்தவற்றைப் பொறுக்கி எளிய நடையில் விளக்கம் எழுதத் தமிழ்ப் பேரறிஞர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் முன்வந்திருக்கிறார். இந்த வரிசையில் இதுவரை ஐந்து புத்தகங்கள் வெளிவந்துள்ளன. எல்லாம் அழுத்தமான நல்ல காகிதத்தில் அழகான அச்சில் மூவர்ண அட்டையுடன் உயர்தரமான பயிண்டோடு கூடியவை. ஒவ்வொரு புத்தகத்திற்கும் விலை ரூபாய் மூன்று. ஒவ்வொரு புத்தகத்திலும் பரிசுப் பதிப்பு ரூபாய் ஐந்து.

**மனை விளக்கு :** (முதற் புத்தகம்)

பொருள் விளங்கியவுடன் மேலும் மேலும் பன்முறை படிக்கவேண்டும் என்னும் அவாவை ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் எழச் செய்யும் சிறந்த நூல்.

**குறிஞ்சித் தேன் :** (இரண்டாம் புத்தகம்)

எளிய இனிய தமிழ் நடையில் ஏற்ற இடங்களில் சம்பாஷணைகள் வழியாகத் தெளிவுபடுத்தி அருஞ் சொற் பொருளைத் தக்க உதாரணங்களில் உணரவைத்துப் படிப்போர் உள்ளத்திற்குச் சலிப்பும் தெவிட்டலும் ஏற்படாதபடி எழுதியுள்ளார் ஆசிரியர்.

**தாமரைப் பொய்கை :** (மூன்றாம் புத்தகம்)

காதல் உலகத்தின் அற்புதங்களையும், இனிய நிகழ்ச்சிகளையும் நுட்பமான இரகசியங்களையும் எடுத்து விளக்கும் அரிய பாடல்களுக்குக் கண்ணாடிபோன்ற விளக்கத்தைக் கதைகளின் உருவத்தில் இப் புத்தகத்திலே காணலாம்.

**பிடியும் களிறும் :** (நான்காவது புத்தகம்)

யானையும் மானும் புறவும் பாலையிலும் காதலுணர்ச்சியால் தியாகம் செய்கின்றன. இத்தகைய காட்சிகளைக் கலித்தொகையிலிருந்து எடுத்து அற்புதமான முறையில் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

**அறப் போர் :** (ஐந்தாம் புத்தகம்)

புறநானூறு என்ற சங்கநூலிலிருந்து சுவையும் சிறப்பும் உள்ள சில பாடல்களுக்குக் கதை உருவத்தில் விளக்கம் தருவது இந்தப் புத்தகம்.

**அமுத நிலையம் லிமிடெட், சென்னை—18**